792

792/4-49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 DEC 1949
MADRAS

# மஸ்ஜிதின்மாண்பு

மௌலவீ, A. சதக்கத்துல்லாஹ் (பாக்கவீ)
அதிபெ—பாஜில், கம்பம்

1949.

Q7:3
N49
110914

விலை ரூபாய் ஒன்று.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 DEC 1949
786
MADRAS

# மஸ்ஜிதின் மாண்பு.

---

மௌலவீ, A. சதக்கத்துல்லாஹ் (பாக்கவீ)
அதீபெ—பாஜில், கம்பம்

---

**1949.**

விலை ரூபாய் ஒன்று.

# முகவுரை.

அன்பும் அருளும் நிறைந்த அல்லாஹ்வின் திருநாமத்தால் எனது ஆரம்பம்.

"மஸ்ஜிதின் மாண்பு" என்ற இந்நூல், இந்தியாவின் பிரபல உலமாக்களாகிய மௌலானா ஷாஹ் அஷ்ரப் அலீ ஸாஹிப் (மர்ஹூம்) அவர்களாலும், மௌலானா முஹம்மது ஷபீஉ ஸாஹிப் அவர்களாலும் இயற்றப்பட்ட உருது நூலின் தமிழ் மொழி பெயர்ப்பேயாகும். தமிழ் நாட்டு முஸ்லிம் சகோதரர்களுக்கு இத்துறையில் இதுவே முதல் நூலாயிருக்கும் என்பது எனது அபிப்பிராயம். பெரும்பாலான மக்கள் மஸ்ஜிது சம்பந்தப்பட்ட விதிகளை நன்கு அறியாமலும் அறிவிக்கப்படாமலும் இருந்து வருகிறார்கள் என்பது மிகமிக வருந்தக்கூடிய விஷயம். இது அக்குறையை ஒருவாறு பூர்த்தி செய்யக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. இதில் ஏதாவது விளக்கம் தேவைப்படுமாயின் உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இதனை ஊன்றிப்படித்து உரியபயனை அடையுமாறு முஸ்லிம் சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

இஸ்லாமிய ஊழியன்,

A. சதக்கத்துல்லாஹ் 'பாக்கவீ'

21—11—49
ஈரோடு.

# மூலநூலாசிரியர் முன்னுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

புகழனைத்தும் சர்வசக்தனுகிய அல்லாஹ்வுக்கே உரித்து. அவனது கருணையும் கடாக்ஷமும் அவனது திருத்தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மீதும் அன்னூர் தோழர்கள் கிளையார்கள் மீதும் உண்டாவதாக.

இற்றைய நாட்களிலே மார்க்கமும் மார்க்கக்கலைகளும் மந்தமாய்க்கிடக்கின்றன. இஸ்லாமியபுனித சின்னங்கள் சிதறுண்டு கிடக்கின்றன. முஸ்லிம்களின் புனிதஸ்தலங்கள் அவர்களின் கைகளைவிட்டு அகன்றுகொண்டே இருக்கின்றன. ஈமான் உள்ள ஒவ்வொரு உள்ளமும் கவலையால் கரைந்துஉருகிவிடக்கூடியகாலம். சத்தியத்தைக் கைகொள்ளும் கண்ணுனது தனதுபார்வையைவிட குருடாகஇருப்பதைச்சகித்துக்கொள்ளும். ஆனல், இந்த இஸ்லாமிய சின்னங்களின் சிதைவும் புனிதஸ்தலங்கள் அடைந்துள்ள அவமானமும் சகித்துக்கொள்ளப்படும் தரமன்று. பலமிக்க பகைவனின் கரங்களாலும், நமது சக்திக்கும் சுயேச்சைக்கும் அப்பாலும் இதுநடந்திருந்தால் நம்மை நிரபராதிகள் என இறைவன் சும்மாவிட்டுவிடுவான்.

ஆனல், ஐயன்மீர்! நாமே இஸ்லாமிய சின்னங்கள் மீதுபுரிந்த அந்த அதிக்கிரமங்களுக்கும், நமது கரங்களாலேயே அவைகளை அழித்து பாழ்படுத்தியதற்கும் நம்மிடம் என்னபதில் இருக்கின்றது? நமது கரங்களும் கால்களும்

அங்கு இழைத்த அவமானத்திற்கும் நம்மிடம் தப்பிக்க என்ன வழியிருக்கின்றது? சர்வசக்தனுகிய அல்லாஹ்வின் மாபெரும் புனித ஆலயங்கள் ஹிஜாஸ், ஷாம், இராக் முதலிய புண்ணியபூமியின் பகுதிகளிலே சேர்ந்திருக்கின்றன என்பது உண்மையே, ஆயினும், இறைவனது பூமியின் ஒவ்வொரு பாகமும், தனது பரிசுத்தத்தன்மையில் சஃபதுல்லாஹ்வின் பிரதிபிம்பமாய் விளங்கக்கூடிய மஸ்ஜிதுகளால் நிறைந்திருக்கின்றன என்பதும் மறக்கக்கூடிய விஷயமன்று. நமது கரங்களிலிருந்து அகன்றுவிட்ட புண்ணிய ஸ்தலங்களுக்காக கண்ணீர்விடக்கூடிய நாம், நமது கைவசத்திலிருக்கும் புண்ணிய ஸ்தலங்களுக்கு என்ன பாதுகாப்பும், மரியாதையும்செய்து வைத்திருக்கின்ரும் என்று ஒவ்வொரு முஸ்லிமும் சிந்திக்க வேண்டாமா?

அந்தோ பரிதாபம்! நம்மிடையே இருக்கும் அநேக மஸ்ஜிதுக்கள் தொழுகைக்கும் ஜமாஅத்திற்கும் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கின்றன. அங்கே, மனிதர்களுக்குப் பதிலாக வகை வகையான பிராணிகள் வசிக்கத்தென்படுகின்றன. சில மஸ்ஜிதுகளில் தொழுகை நடைபெறுகிறது ஆனல், அவைகளைப் பார்த்தால் ஷரீஅத் பிரகாரம் தொழுகை நடைபெறும் இடங்களாகச் சொல்லமுடியாது "பிற்காலத்திய மக்களின் மஸ்ஜிதுகளில் வெளித்தோற்றத்தில் தொழுகை நடைபெறும். ஆனல் உண்மையில் அவைகள் பாழடைந்தவைகளே" என்று இத்தகைய மஸ்ஜித்களைப்பற்றித்தான் முன் அறிவிப்பாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிப்போந்தனர். முதலாவது, அவைகளிலே தொழுகையாளிகள் மிகக்குறைவு. மேலும், அவர்

களுக்கு அவைகள் (கூடிப்பேசும்) சாவடிகளாகவே இருக்கின்றன.

ஆஹ்! அந்தோ!! சர்வாக்கினையுள்ள இறைவனின் தர்பாரும் அதன் கௌரவமும் என்ன? இன்று இறைவனின் இல்லம் அவனது தொழுகையைவிட்டு காலியாக இருக்கும் நிலைமையும் என்ன? உலக சம்பந்தமான சகல காரியாதிகளும் அங்கே காணப்படுகின்றன. எல்லா வகையான வம்புவழக்குகளும் அங்கு நடைபெறுகின்றன. கடைவீதியின் கூச்சலும்சந்தடியும் அங்கே கேட்கின்றன. சாப்பாட்டு அறைகளுமுண்டு. படுப்பதற்கும் உறங்குவதற்கும் வசதியான இடங்களும் அங்கே உண்டு, சுருங்கக் கூறின், எல்லாம் உண்டு ஆனால் அகிலாளும் அரசனாகிய அல்லாஹ்வின் இந்த தர்பார் எந்நோக்கத்திற்காகக் கட்டப்பட்டதோ அதுமட்டும் அங்கே பூஜ்யம். மஸ்ஜிதுகளில் நறுமணம் பூசுவதும் வாசனைப்புகை போடுவதும் முன்னோர்களின் ஆச்சாரமாக இருந்துவந்தது. ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள் பிரதிஜும்ஆ தினத்திலும் மஸ்ஜிதை சுத்தப்படுத்தி வாசனைதெளித்து நறுமணப் புகைகள் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

அந்தோ! இன்று நமது மஸ்ஜிதுகள் நறுமணங்களுக்குப் பதிலாக துர்வாடைகளாலும் அசுத்தங்களாலும் நிறைந்து கிடக்கின்றன. நறுமணத்திற்குப் பதிலாக அவைகளில் துர்நாற்றமுள்ள மண்ணெண்ணெய் எரிக்கப்படுகின்றது. இறைவனின் பரிசுத்தமான அமரர் (மலக்கு) கள் நமது செயலால் சங்கடப்படுகின்றார்கள். நாம் நன்மையைப் பெற மஸ்ஜிதுக்குச் சென்று, அங்கிருந்து அமரர்களின் சாபத்தைச் சுமந்துகொண்டு திரும்புகிறோம்.

ஏனெனில் ஒருவர் பள்ஜிதில் உலகவிவகாரத்தைப் பேச ஆரம்பித்துவிட்டால், முதலில் மலக்குகள், "ஏ இறைவனின் நண்பனே! சும்மா இரு" என்று சொல்லுகிறார்கள். அவர் சும்மா இராமல் மீண்டும் பேசத் தொடங்கினால், "ஏ இறைவனின் விரோதியே! சும்மா இரு" என்கிறார்கள். மேலும், அவர் பேச்சை நிறுத்தாவிட்டால், "என்மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாக! சும்மா இரு" என்று கூறுகின்றார்கள்.

இவ் விஷயங்களை யெல்லாம் பார்த்தபின் மஸ்ஜிதுகளின் ஒழுக்கம்பற்றி ஒரு சிறுநூல் எழுத வேண்டுமென எனக்கு எண்ணம் பிறந்தது. எனது தகுதியின்மையாலும் கல்விக்குறைவினாலும் நான் செய்திருக்கும் பாவங்களாலும் இக்காரியத்தைச் செய்ய எனது மனம் ஊக்கம் பெறாது போயினும், இறைவனின் ஒரு நல்லடியாராவது, இதனைப்படித்துப் பயன் பெறப்போதும் மேலும் அவரது துஆவினால் பாவியாகிய எனக்கு நற்பாக்கியம் நல்கிவிடக் கூடும் என்று எண்ணியே இதனை ஆரம்பித்துவிட்டேன்.

வாசகர்களிடம் நான் வேண்டிக்கொள்வதாவது, இதன்படி நடக்க தாங்களும் முயன்று பிறருக்கும் படித்துக்காட்டி இதன்பக்கம் கவனத்தை திருப்பிவைப்பார்களாக! மேலும் இப்பாவியையும் நல்ல பிரார்த்தனையில் மறந்துவிடா திருப்பார்களாக!

---

# மஸ்ஜிதுகள் இறைவனின் இல்லங்கள்.

சந்தேகமின்றியே பூமியில் இறைவனின் இல்லங்கள் மஸ்ஜித்களாயிருக்கும். நிச்சயமாக எம்மனிதர் இறைவனைச் சந்திப்பதற்காக மஸ்ஜிதுகளுக்குச் செல்வாரோ அவரை இறைவன் கண்ணியப்படுத்துவான் என்பதற்கு அவன் பொறுப் பேற்றுக்கொண்டான். (ஹதீது)

எனவே, மஸ்ஜித்களைக் கௌரவிப்பதானது உண்மையில் இறைவனைக் கௌரவிப்பதாகும். மேலும் அவைகளை அலட்சியம் செய்வதானது, இறைவனை அலட்சியம் செய்வதாகும்.

எச்சரிக்கை:—

மேற்கூறப்பட்ட ஹதீதின்மூலம் மஸ்ஜிதுகள் பரிசுத்த இறைவனின் இல்லங்கள் என்பது ருசுவாகின்றது. ஆனால், ஆதி அந்தமற்ற அந்த இறைவன், நாம் நமது வீடுகளில் அமர்ந்திருப்பது போன்று மஸ்ஜிதின் நான்குசுவர்களுக்குள் அமர்ந்திருக்கிறான் என்று எண்ணிவிடக் கூடாது. எனினும், எவ்வாறு சூரியனுக்கு முன்னால் கண்ணாடியை வைத்தால் சூரியனின் குறிப்பான ஒளியினால் அதுவும் பிரகாசமடைந்து இதர வஸ்துக்களையும் பிரகாசிக்க வைக்கின்றதோ அம்மாதிரியே என்று எண்ணிக் கொள்க. பூமியைவிடப் பல இலட்சமடங்கு பெரிதான சூரியன் இச்சிறிய கண்ணாடிக்குள் வந்துவிட முடியாது போயினும் அதன் குறிப்பான ஒளிச்சுடர் வீசுகின்றது. இதேமாதிரி பரிசுத்த இறையோனின் குறிப்பான ஜோதி அந்தஇல்லங்களில் சுடர்வீசிக்கொண்டிருக்கிறது. அதனால் அங்கு தெய்வீகசுடர் ஒளிகள் காணப்படுகின்றன. மேலும்,

அங்கிருப்பவர்கள்மீதும் அவைகளின் கதிர்கள் வீசுகின்றன.

## மஸ்ஜிதுகள் பரலோகத்தின் கடைவீதிகள்

ஹஜ்ரத் அபுத்தர்தாஉ (ரலி) அவர்கள்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள், மஸ்ஜிது, மறுமையின் கடைவீதிகளில் ஒரு கடைவீதியாகும். எவர் அதனுள் பிரவேசிப்பாரோ அவர் அல்லாஹ்வின் விருந்தினர். அவனளிக்கும் விருந்து பாவமன்னிப்பாகும். கண்ணியமும் சிறப்பும் அவனது அன்பளிப்பாயிருக்கும். எவ்வாறு அதிகாலையில் உலகத்தின் கடைவீதிகள், சந்தைகள் கூடுகின்றனவோ, மேலும் ஜனங்கள் தங்கள் தங்கள் தேவைக்கேற்ப விற்பதிலும் வாங்குவதிலும் ஈடுபட்டிருக்கின்றார்களோ, அவ்வாறே அதேசமயம் இந்த மறுமையின் கடைவீதிகளும் அமைக்கப்படுகின்றன. மேலும், அல்லாஹ்வின் நல்லடியார்கள் அவைகளை நோக்கி விரைந்து ஓடுகின்றார்கள். இதே விஷயத்தை கீழ்காணும் ஹதீது நன்கு ருசுப்படுத்துகின்றது. அதாவது, "ஒவ்வொரு மனிதனும் காலையில் எழுந்திருக்கும்போது தனது மனப்போக்கை (நப்சை) விற்று விடுகின்றான். பின்பு சிலர் நன்னடத்தைகளுக்குப் பதிலாக அதனை விடுதலைசெய்கின்றார். இன்னும் சிலர் தமது துர்க்கிரியையின் காரணமாக அதனை நாசமாக்கிவிடுகின்றார். உலகத்தின் கடைவீதிகளிலிருந்து இந்த ஐந்துநாள் (குறுகியகாலம்) உலகவாழ்விற்காக சாமான்கள் வாங்கப்படுகின்றன. மறுமையின் கடைவீதிகளில் (மஸ்ஜிதுகளில்) அந்த நித்தியமான பரலோக இல்லத்திற்குரிய

சாமான்கள் விற்கப்படுகின்றன. அதில் எப்போதும் வாசம் செய்யவேண்டியதிருக்கின்றது. ஏ! உலகத்தின் கடைவீதி களில் உலவக்கூடியவர்காள்! அல்லாஹ்வுக்காக சற்று பாலோக கடைவீதிகளிலும் சுற்றிக்கொள்ளுங்கள்!!

## மஸ்ஜிதுகள் சுவர்க்கத்தின் பூங்காவனங்கள்

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்ப தாவது, 'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமா னூர்கள்.'' எப்போது நீங்கள் சுவர்க்கத்தின் பூங்காவின் பக்கம் செல்வீர்களோ, அப்போது அதன் கனிகளைப் புசியுங்கள்; அது சமயம் யாரசூலல்லாஹ்! சுவர்க்கத் தின் பூங்கா யாது? என வினவப்பட்டபோது, மஸ்ஜிது கள் என்று பதிலளித்தார்கள், யாரசூலல்லாஹ்! அவை களின் கனிகளைப் புசிப்பதன் கருத்தென்ன? என்று வினவப்பட்டபோது, 'சுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில் லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்' என்ற கலிமாவை ஓதுவதாகுமென பதிலளித்தார்கள்.

## எல்லா ஸ்தலங்களிலும் இறைவனுக்குப்பிரியமானவை அவனது மஸ்ஜிதுகளே

ஹஜ்ரத் அபூஉமாமா (ரலி) அவர்கள்மூலம் ஒரு நீண்ட ஹதீதில் அறிவிக்கப்படுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானூர்கள், '' இடங்கள் அனைத் திலும் மிகக்கெட்டது கடைவீதி, இன்னும் அனைத்திலும் சிறந்தவை மஸ்ஜிதுகள்.'' பெரும்பாலும் இதன் காரணம்

கீழ்வருமாறு:— உலகத்தின் தோற்றத்தின் மூல நோக்க மானது, குர்ஆன் ஷரீபின் கட்டளைப்பிரகாரம் அல் லாஹ்வை நினைப்பதற்கும் அவனை வணங்குதற்குமேயாகும். இதனாலேயே எந்த இடங்கள் இந்த நோக்கத்தை அதிக மாகநிறைவேற்றுகின்றனவோ, அவை அல்லாஹ்வின்பால் அதிகப் பிரியமானவைகளாகும். இன்னும் எந்த இடங் களில் அவனை நினைப்பதற்குப் பதிலாக மறதியும், வணக் கத்திற்குப்பதிலாக பாவமும் நிகழ்கின்றதோ அவைகள் அல்லாஹ்வின்பால் மிகக்கெட்டவைகளாகும். மஸ்ஜிது கள் அல்லாஹ்வை நினைப்பதற்காகவே கட்டப்பட்டிருத் தலால் அவைகள் சிறந்த இடங்களாயின. கடைவீதிகள் பொதுவாக மறதி, பாவம், பொய், மோசடி, கூச்சல், வம்பு வழக்கு முதலியவைகள் நிகழும் இடங்களாக இருப்பதால் அல்லாஹ்வின்பால் வெறுக்கபபடலாயின.

இதனாலேயே கண்ணியமிக்க சஹாபாக்களும் சிறப்பு வாய்ந்த முன்னோர்களும் கடைவீதிகளுக்குச் செல்வார் களாயினும், வியாபாரம் செய்வார்களாயினும் எந்தக் காரணத்தால் கடைவீதி அல்லாஹ்வுக்கு வெறுப்பான தாகிவிடுமோ அத்தகையகாரணம் தங்களிடம் அணுகா வண்ணம் முயற்சித்துக்கொண்டிருந்தார்கள் எனவே கடைவீதியில் விற்றுக்கொண்டிருக்கும்போதும் வாங்கிக் கொண்டிருக்கும்போதும் அவர்களின் நிலைமையானது "கரங்கள் காரியத்திலும், கவனம் இறைவன்பாலும்" என்பதற்கேற்ப இருந்துவந்தது. மேலும், அவர்களின் நிலைமை எங்கனமிருந்ததென்றால், "ஒரு கருமான் சம் மட்டியை மேலே உயர்த்தி ஒரு இரும்பின்மீது அடிக்க எத்தனித்தபோது பாங்கு சத்தம் காதில் விழுந்துவிட்

டால் உடனே சம்மட்டியை கையிலிருந்து கீழேபோட்டு விட்டுஅல்லாஹ்வின் வீட்டை நோக்கி ஓடுகிறார். உயர்த்திய சம்மட்டியால் ஒரு அடி அடிப்பதன்மூலம் அவ் வேலையைச் சிறிது முடித்துக்கொள்ளலாம் என்றுகூட பொருட்படுத்துவதில்லை. பாங்கு சப்தம் அவர்களின் கடைவீதியில ஒலித்துவிடுமாயின் உடனே கடைகளை மூடிவிட்டு விற்பனையை நிறுத்தி மஸ்ஜிதுகளை நோக்கி ஓடுவார்கள். இத்தகைய மகானுபாவர்களின் சிறப்புக்குறித்து கீழ்வரும் இறைவசனம் இறங்கலாயிற்று. "அவர்கள் எத்தன்மைவாய்ந்தவர்கள் என்றால், வியாபாரமும், விற்பதும் வாங்குவதும் அவர்களை அல்லாஹ்வின் நினைவை விட்டு மறக்கவைத்துவிடமாட்டாது."

கடைவீதியானது தீமையும் குழப்பமும் நிறைந்த இடமாயிருத்தலால் அங்கு செல்லும்போது, 'லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல்முல்கு வலஹுல்ஹம்து யுஹ்யீ வயுமீது வஹுவ அலா குல்லி ஷையின்கதீர்' என்ற கலிமாவை ஓதிக்கொள்வது சுன்னத்து. ஹதீதில் இதன்பலன்கள் மிக மிகக் கூறப்பட்டுள்ளன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளினார்கள், "கடைவீதியில் பிரவேசிக்கும்போது எவர் இப்புனித கலிமாவை ஓதுவாரோ, அவருக்காக ஒருலட்சம் நன்மைகள் எழுதப்படும். ஒருலட்சம்தின்மைகள் மன்னிக்கப்படும். மேலும் ஒருலட்சம் பதவிகள் உயர்த்தப்படும். மேலும் அவருக்காக சுவர்க்கத்தில் ஒருமாளிகை கட்டப்படும்". சிலசஹாபாக்கள் அறிவிக்கின்றார்கள், 'அவர்கள் சில சமயம் இக்கலிமாவை ஓதுவதற்கும் அதன் மகத்தான நன்மைகளை அடைவதற்குமென்றே கடைவீதிக்குச்சென்று

கொண்டிருந்தார்களாம். அவர்களின் பயபக்தியும் அல்லாஹ்வின் தியானமும், கடைவீதிகளையும்கூட மஸ்ஜித்களாக்கி விட்டன. மேலும், இம் மகத்தான பரலோக பாக்கியத்திற்குக் காரணமாகவும் ஆக்கிவிட்டது. அந்தோ! இன்று நமது மறதியும் பாவமும் நமது மஸ்ஜிதுகளைக்கூட கடைவீதிகளாக்கிவிட்டது. அவர்கள் இகத்தின்கடைவீதியிலிருந்தும் பரத்தின்சாமான்களைத்தேடிக்கொண்டுவந்தார்கள்: பரிதாபம்! நாம்பரலோககடைவீதியிலிருந்து குருடர்களாகத் திரும்புகின்றோம். இகத்தின்சாமானும் கிடைக்கவில்லை, பரத்தின்சாமானும் கிடைக்கவில்லை. ஆயினும்கூட, இதனைவிடவும் நஷ்டமான காரியம் யாதெனின், அங்கே கொஞ்சம் நஞ்சமிருந்த நன்மையைக்கூடக் குறைத்துக் கொண்டு வருகின்றோம். நன்மைகளையும் அங்கே பறிகொடுத்துவிடுகின்றோம். என்னெனின், அல்லாமா இப்னுஹுமாம்; பத்ஹுல்கதீர், என்றநூலில் எழுதுகின்றார்கள், 'மஸ்ஜிதுகளில் உலகவிஷயங்களைப் பேசுவதானது, கால்நடைகள் புல்லைத்தின்றுவிடுவது போன்று நன்மைகளை அழித்து விடுகின்றது; என்று.

## மஸ்ஜித் உலகத்தின் எல்லா வீடுகளிலும் முதன்மையானதும் இறுதியானதுமாகும்

எல்லாவற்றிலும் முதன்மையானது என்பதற்கு குர்ஆனிலிருந்து ஆதாரமிருக்கின்றது. அல்லாஹ்தஆலா திருவுளமானான், "நிச்சயமாக மாந்தருக்கு அமைக்கப்பட்ட முதலாவது வீடானது, மக்காவிலுள்ள வீடேயாகும். அது

புனிதமும் நேர்வழியும் பொருந்தியது'' சில விரிவுரையாசிரியர்கள் எழுதுகின்றார்கள், 'பூமியின் தோற்றத்திற்கு ஆரம்பமும் இதே இடத்திலிருந்துதான் ஏற்பட்டது; என்று. உலகத்தின் முதன் முதலான வீடு சிறப்பு வாய்ந்த கஃபாதான் என்பது இதிலிருந்து புலனாகிறது. அது மஸ்ஜிது மட்டுமல்ல. உலகத்திலுள்ள எல்லா மஸ்ஜிதுகளுக்கும் மூலாதாரமானது- மேலும், எல்லா மஸ்ஜிதுகளுக்கும் இறுதியாக இருக்கக்கூடியது என்பதும் மற்றொரு ஹதீதிலிருந்து தெரியவருகிறது. கன்ஜுல் உம்மால் என்ற கிதாபில் அவ்ஸத் தப்ரானீ (ரஹ்) அறிவிப்பதாவது, ஹஜ்ரத் இப்னு உமர் (ரலி) எடுத்தியம்பினார்கள். ''கியாமத்நாளில் பூமிகள் அனைத்தும் அழிந்துவிடும, மஸ்ஜித்களைத் தவிர. அவைகள் எல்லாம் தங்களுக்கிடையே ஓரிடத்தில் ஒன்று சேர்ந்துகொள்ளும்'' என்று நபிகள் (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

இதிலிருந்து, எல்லா மஸ்ஜித்களும் சேர்ந்து கஃபதுல்லாஹ்வுடன் ஐக்கியப்பட்டுவிடும் என்பது தெளிவாகின்றது. ஏனெனில், அதுவே அனைத்திற்கும் மூலாதாரமானது என்பது குர்ஆனிலிருந்து ருசுவாகின்றது. இன்னும் சில ஹதீதுகளில், 'பின்பு எல்லா மஸ்ஜிதுகளும் சேர்ந்து சுவர்க்கத்திற்கு சென்றுவிடும்' என்று வந்திருக்கிறது. சுருங்கக்கூறின், பூமி, அதிலுள்ள எல்லாவீடுகளைப் பார்க்கினும் முதன்மையான வீடு மஸ்ஜிதே என்பது ருசுவாகிவிட்டது. மேலும், கியாமத்நாளில் பூமி துண்டு துண்டாகப்பறந்து, வீடுகள் அனைத்தும் அழிந்து, மலைகள் எல்லாம் பஞ்சுபோல் பறந்து திரியும் காலையிலும் மஸ்ஜிதுகள் நிலைத்து நிற்கும். பின்பு சுவர்க்கத்திற்கும் சென்றுவிடும்.

## மஸ்ஜிதின்மாண்பு

மஸ்ஜிதின் அண்டையில் வசிப்பதன் சிறப்பு ஹதீதில் வந்திருக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள். "மஸ்ஜிதைவிட்டுத் தூரமாயிருக்கும் வீட்டைப்பார்க்கினும், மஸ்ஜிதை அடுத்திருக்கும் வீட்டின் சிறப்பானது, சும்மா இருக்கும் வீரனைவிட, போர் புரியும் வீரனுக்குள்ள சிறப்புப்போன்றதாகும்" என்று. ஆனால் எவர்களது வீடுகள் மஸ்ஜிதைவிட்டுத் தூரமாயிருக்கின்றனவோ, அவர்கள் அவைகளைவிட்டுவிடவேண்டும், என்பது இச்சிறப்பின் நோக்கமல்ல ஏனெனின், இப்பிரச்சினை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமே முன்வந்திருக்கிறது. மஸ்ஜிதிலிருந்து தூரத்தில் வசிக்கும் சஹாபாக்களுக்கு, தங்கள் தங்கள் இல்லங்களிலேயே வசியுங்கள் அவைகளைவிடுத்து மஸ்ஜிதின் சமீபத்தில்வந்து குடியேறவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், மஸ்ஜிதை நோக்கி எவ்வளவு தொலைவிலிருந்து நடந்துவருவீர்களோ அவ்வளவு அதிகமான நன்மைகளை அடைவீர்கள். என்று உத்திரவு செய்திருக்கின்றார்கள்.

சம்பவத்தின் விபரம் வருமாறு:- ஒரு தடவை மஸ்ஜிதே நபவீயின் அருகே உள்ள ஒரு துண்டு நிலம் காலி செய்யப்பட்டது. அப்போது மஸ்ஜிதுக்குத் தூரத்தில் வசித்துவந்த 'பனூசல்மா' கூட்டத்தார்கள் அவ்விடத்தை கிரயத்திற்குவாங்கி அங்கு தங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்ள நாடினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இச்செய்தி எட்டியவுடன், "உங்கள் வீடுகளைவிட்டுவிட்டு மஸ்ஜிதை அடுத்துக்குடியேற நாடுகின்றீர்களா? என வினவினார்கள். அவர்கள் 'ஆம்' என்றபோது

“ஏ! பனீசல்மாக்களே! தங்கள் வீடுகளிலேயே வசியுங்கள் (நீங்கள் மஸ்ஜிதுக்கு நடந்துவரும்போது) உங்கள் காலடிகள் நன்மைகளில் எழுதப்படும்,” என்றூர்கள்.

சுருங்கக்கூறின், எவரதுவீடு மஸ்ஜிதையடுத்திருக்கின்றதோ, அவர் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஏனென்றால், அவருக்கு இறைவன் இத்தகைய பாக்கியத்தை அளித்திருக்கின்றான். மேலும் எவரதுவீடு தூரமாக இருக்கின்றதோ, அவர்கள் அதனைவிட்டுவிடலாகாது. எனினும், இரண்டாவது முறையில் (அதிகம்நடந்து செல்வதன் மூலம்) அதிக நன்மையை அடைந்துகொள்ள வேண்டும்.

## மஸ்ஜிது கட்டுவதன் நன்மை

ஹதீது:— நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள், “எந்தமனிதர் அல்லாஹ்வுக்கென ஒரு மஸ்ஜிதைக் கட்டுவாரோ, அவருக்காக அல்லாஹுதஆலா சுவர்க்கத்தில் ஒரு மாளிகையைக் கட்டுவான்”.

மேலும் மஸ்ஜிதானது, ஒரு நித்திய தர்மமுமாகும். எதுவரை ஜனங்கள் அதில் தொழுதுகொண்டிருப்பார்களோ, அதுவரையில் அவருக்கு நன்மை கிடைத்துக்கொண்டே இருக்கும். மஸ்ஜிது கட்டுவதன் நன்மைகள் பல ஹதீதுகளில் வந்திருக்கின்றன. ஆயினும், அவசியமின்றியும் மஸ்ஜிதுகள் கட்டப்படவேண்டுமென்பதல்ல ஏழைகளும் அனாதைகளும் வறுமையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும்போது தர்மச்சொத்துக்களை செலவு செய்ய முற்படும் சிலர், அவசியமில்லாத போதும்கூட அதனை மஸ்ஜிதிலேயே சேர்த்துவிட நினைக்கிறார்கள். அத்தியாவசியமான

சந்தர்ப்பங்களையும், எந்ததுறையில் செலவுசெய்வது என்பதையும் நன்கு ஆலோசித்து தர்மச்சொத்துக்களை செலவு செய்வதே மனிதரது அறிவுடைமை; ஸ்தலத்திலுள்ள ஏழைகளுக்கும் தேவைப்பட்டவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பது மேன்மையாயிருக்கும். ஸ்தலத்தில் மஸ்ஜிது இல்லாவிட்டால் அங்கு மஸ்ஜிதுகட்டுவது முக்கியமாகும். இஸ்லாமியப் பாடசாலைகளுக்குப் பணம் தேவையானல் அதற்கு கொடுப்பது விசேஷமாகும். எதுவாயினும்சரியே, தர்மம்செய்வதில், முக்கியம்வாய்ந்ததும் அவசியம் வாய்ந்ததுமே முதன் முதலில் கவனிக்கவேண்டியதாகும். பின்பு தான் இதர விஷயங்கள்.

## வீடுகளில் மஸ்ஜிது அமைப்பது

தமதுவீட்டில் ஓரிடத்தைக் குறிப்பாக தொழுகைக்கென்றே அமைத்து அதைப்பரிசுத்தமாக வைத்துக்கொள்வதும் அதில் வாசனைபோடுவதும்சுன்னத்தாகும். ஹதீதில் இவ்விடம் மஸ்ஜிது என்ற வார்த்தையின் மூலமே கூறப்பட்டுள்ளது.

ஹஜ்ரத் ஆயிஷா (ரலீ) அவர்கள் அறிவிக்கின்றார்கள், "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வீடுகளிலே மஸ்ஜிதுகள் கட்டிக்கொள்ளுமாறும் அவைகளை சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறும், அவைகளில் நறுமணம் போடுமாறும் கட்டளையிட்டார்கள்" அவ்விடங்களில் தொழுவதற்கு பொது அனுமதி இல்லாத காரணத்தால் முற்றிலும் மஸ்ஜிது என்ற தோரணையில் இல்லாவிட்டாலும்கூட ஹதீதில் அவைகள் மஸ்ஜிது என்றே அழைக்கப்பட்

டுள்ளன. மேலும், பெண்கள் 'இஃதிகாப்' இருக்க விரும்பினால் அவ்விடங்களிலேயே இருக்கலாம். 'குலாசதுல் பதாவா' என்ற கிரந்தத்தில் காணப்படுவதாவது:- ஒவ்வொரு முஸ்லிமும் தனது வீட்டில் ஒரு மஸ்ஜிதை அமைத்து அதில் சுன்னத், நபில் ஆன தொழுகைகளைத் தொழுதுவருவது முஸ்தஹப்பாகும். ஆனால், அதற்கு முற்றிலும் மஸ்ஜித் என்ற விதிகிடையாது. உதாரணமாக மாதவிடாய் காலத்தில் பெண்கள் அதில் பிரவேசிக்கலாம். மஸ்ஜிது அவ்வாறல்ல. அங்கு பிரவேசிப்பது கூடாது.

## மஸ்ஜிதில், கொடி செடி முதலிய அனுவசியமான சித்திர வேலைசெய்வது

மஸ் அலா:— மஸ்ஜிதின் சுவர்களிலும் விரிப்புகளிலும், தொழுகையின் கவனத்தைச் சிதறவைக்கக்கூடிய வர்ண வர்ணமான கொடி செடிகள் வரைவது மக்ரூஹ் குறிப்பாக மிஹ்ராபிலும் கிப்லாவின் சுவற்றிலும் இருப்பது அதிக மக்ரூஹ்.

ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "எப்போது ஒரு சமுதாயத்தின் நிலைமை கெடுகின்றதோ, அப்போது அவர்கள் தங்கள் மஸ்ஜிதுகளை (வர்ணங்களால்) அலங்காரம்செய்ய ஆரம்பிக்கின்றார்கள்."

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள். "எப்போது நீங்கள் உங்களது மஸ்ஜிதுகளை (தொழுகையின் அமைதியைக் குலைக்கும் முறையில்)

அழகுபடுத்த முற்படுவீர்களோ, மேலும் (உள்ள அமை திக்கு ஊறு விளைவிக்கும் முறையில்) தங்களது குர் ஆனை (ஓதுதலை) அலங்காரம் செய்ய முற்படுவீர்களோ, அப் போது அது உங்களது அழிவுகாலம் என்று அறிந்து கொள்ளுங்கள்.''

மஸ்ஜிதுகளை அலங்காரம் செய்வதில் மூழ்கிக் கிடப்பதை யூத-கிறிஸ்தவர்களின் பழக்கம் என்று ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியிருக் கின்றார்கள். மேலும் ''நீங்கள் யூதர்கள் கிறிஸ்தவர் களைப்போன்று மஸ்ஜிதுகளை அலங்காரம் செய்வீர்கள்'' என அதனைவெறுக்கும் தோரணையில் எச்சரிக்கை செய் திருக்கிறார்கள். ஆனால், சுத்தப்படுத்துவது வேறு விஷயம் என்பதையும், அழகுபடுத்துவதில் பூ வேலை செய்வது வேறு விஷயம் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மஸ்ஜிதுகளை சுத்தமாக வைத்துக் கொள்வது சுன்னத்தும் அவசியமுமாகும். இன்ஷா அல்லாஹ் இதன்விபரம் பின்னால்வரும். அளவுகடந்து அலங்காரம் செய்வதும் பூவேலை செய்வதும் மக்ரூ ஹும் வெறுக்கத் தகுந்ததுமாகும். மரத்தாலும், சுண்ணாம்பாலும், சிமிண்டாலும் பூவேலைசெய்தால் பாதக மில்லை. ஆனால், அதனையும் விட்டு விடுவதே மேலாகும்.

'குலாசதுல்பதாவா' என்னும் நூலில் காணப்படு கிறது இத்தகைய கொடி செடிவேலைகளில் பணத்தை விரயம் செய்வதைவிட அதனை ஏழைகளுக்கும் இயலாத வர்களுக்கும் செலவு செய்வதே மேன்மையாகும்.

மஸ் அலா:- சுண்ணும்பு, சிமிண்டினுல் செடி, கொடி பூவேலை செய்வதும்கூட, கட்டியவர் தனது சொந்தப் பணத்தைக்கொண்டு செய்தால்தான் ஆகும். வக்பு, சந்தா சொத்திலிருந்து செலவு செய்தால் வக்பு செய்தவர்களும் சந்தாக் கொடுத்தவர்களும் அனுமதிக்காத வரையில் அறவே ஆகாது. மேலும், மஸ்ஜிதின் நிர்வாகி, அவர்களது அனுமதியின்றி வக்பு அல்லது சந்தா தொகையைக் கொண்டு ஆகுமான சித்திர வேலை செய்த போதிலும் அவரே அந்தப் பணத்திற்குப் பொறுப்பாளியாவார்.

## மஸ்ஜிதுகளின் தரம்

மஸ்ஜிதுகள் யாவற்றினும் மிகமதிப்பு வாய்ந்தது கஃபதுல்லாஹ்வே. ஏனெனில், அதுதான் எல்லாமஸ்ஜிதுகளுக்கும் கிப்லாவாகவும் மூலாதாரமாகவும் இருக்கின்றது. எவர் அதில் ஒரு தொழுகை தொழுவாரோ, அவருக்கு ஒரு லட்சம் தொழுகையின் நன்மைகள் கிடைக்கின்றன. அதன் பிறகு (மதீனுவிலுள்ள) மஸ்ஜிதெநபவீ (பைதுல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதெ அக்சா இவ்விரண்டுமாகும். இவைகளில் ஒரு தொழுகை தொழுகிறவருக்கு ஐம்பதாயிரம் தொழுகையின் நன்மைகள் கிடைக்கின்றன. பின்பு இவைகளுக்குப்பின் நகரத்திலுள்ள ஜாமிஉமஸ்ஜிது. அதில் தொழுகும் ஒரு தொழுகைக்கு ஐநூறு தொழுகைகளின் நன்மைகள் உண்டு. பின்பு (மஹல்லா) வட்டாரத்திலுள்ள மஸ்ஜித். அதில் ஒரு தொழுகைக்கு 25 தொழுகைகளின் நன்மைகள்கிடைக்கின்றன. இவ்விபரத்தை ஹஜ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் அறிவித்திருக்கின்றார்கள்.

ஆனல், வட்டாரத்திலுள்ளவர்கள் வட்டாரமஸ்ஜிதில் தொழுவது, ஜாமிஉமஸ்ஜிதில் தொழுவதைவிட மேன்மையும்சிறப்புமாகும். மதிப்பிற்குரிய முன்னோர்களும், சஹாபாக்களும், தாபிஈன்களும்இவ்வாறே நடந்து வந்தார்கள் என்பது இதற்கு ஆக்கமளிக்கின்றது. எல்லோரும் ஐங்காலத்தொழுகைகளை தங்கள் வட்டாரத்திலுள்ள மஸ்ஜிதுகளிலேயே தொழுது வந்தார்கள். அவைகளை விட்டு விட்டு ஜாமிஉமஸ்ஜிதுக்குச் செல்லவில்லை.

பொதுமக்களுக்காக இச்சிறப்பு குறிப்பாக ஜும்ஆத் தொழுகைக்குமட்டுமே என்பதுஇதிலிருந்து தெரிகின்றது. வட்டாரத்திலுள்ளவர்களுக்கு ஐங்காலத் தொழுகையானது (அவர்களது மஸ்ஜிதிலேயே) 500 தொழுகையின் நன்மைகளை அளிக்கும். இதனுற்றுன், அல்அஷ்பாஹுவன்நலாயிர்'' என்றகிதாபில்காணக்கிடக்கின்றது, "வட்டார மஸ்ஜிதானது (அதனைச்சேர்ந்தவர்களுக்கு) ஜாமிஉமஸ்ஜிதாயிருக்கும். ஆனல், ஜாமிஉமஸ்ஜிதின் இமாம் 'ஆலிம்' ஆக இருந்தால் பின்பு ஜாமிஉமஸ்ஜிதே சிறந்தது''.

மஸ்அலா:— கடைக்காரர்களுக்கு இராக்காலங்களில் அவர்களது வீட்டிற்கு அடுத்திருப்பதே வட்டார மஸ்ஜிதாகும். பகற்காலங்களில் அவர்களது கடைகளுக்கு அடுத்திருப்பதே வட்டாரமஸ்ஜது என்று கருதப்படும்.

உத்தியோகம் வகிப்பவர்களுக்கு இதே விதிதான். பகற்காலங்களில் உத்தியோக ஸ்தலத்திற்கு அடுத்திருப்பதும், இராக்காலங்களில் வீட்டுக்குப் பக்கத்திலுள்ளமஸ்ஜிதும் வட்டாரமஸ்ஜித் என்று கருதப்படும்.

மஸ்அலா:— 'அஷ்பாஹுந்நலாயிர்' என்ற நூலின் விரித்துரையில் வருகின்றது,'' மாணவர்களுக்கு அவர்களது ஆசிரியரின் மஸ்ஜிதானது, அவர்களின் வட்டார மஸ்ஜிதை விட விசேஷமானது. ஏனென்றால், அவர்களுக்குபடிப்பில் ஆசிரியரின் ஒத்தாசை கிடைக்கும்.

## மஸ்ஜிதின் பரிசுத்தம்

மஸ்ஜிதுகள்சுத்தமாகவைக்கப்படவேண்டுமென்றும், மேலும் அவைகளில் வாசனைகள் போடப்பட வேண்டுமென்றும் நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள், தற்காலத்தில், ஒவ்வேரு காரியத்திலும் ஆடம்பரமும் மிகைப்படுத்தலும் மலிந்து கிடப்பதே போன்று மஸ்ஜிதுகளின் சுத்தத்திலும் இதே ஆபத்து முற்பட்டிருக்கின்றது. சிலஇடங்களில் சுத்தப்படுத்துவதில் வரம்பைக்கடந்து அதனை ஆடம்பரம் என்ற அளவுக்கு உயர்த்திவிடப்பட்டிருக்கின்றது. மஸ்துகள் வகை வகையான நக்ஷாசித்திர வேலைகளால் அலங்கரிக்கப்பட்டுத் தோன்றுகின்றன. மேலே எழுதியபடி அதுமக்ரூஹானது. வேறுசில இடங்களில் மிகமிக அசிரத்தையாகவும் அலட்சியமாகவும் விடப்பட்டிருக்கின்றது. மஸ்ஜிதுகளில் குப்பை கூளங்கள் குவிந்து கிடக்கின்றன. புழு, பூச்சிகள் வலைகள் பின்னியிருக்கின்றன. சுவர்களும் தரையும் எண்ணெய்க்கரைகளால் பாழடைந்துகிடக்கின்றன. அது விலேயே மஸ்ஜிதுகளை அவமானம் செய்வதாகும். எவ்வகையிலும் அனுமதிக்க முடியாததுமாகும்.

ஹதீது:— எந்த வஸ்துக்களால் ஜனங்களுக்கு கஷ்டம்விளைகின்றதோ, அவை அனைத்தாலும் மலக்குகளுக்

கும் கஷ்டம் விளைகின்றது. எப்போது ஒரு மனிதன் தனது வீட்டை குப்பை கூளங்களால் நிறைந்து கிடப்பதைப் பார்க்க சகிக்கமாட்டானோ அப்போது மிருதுத்தன்மை வாய்ந்த மலக்குகள் இதனை எவ்வாறு விரும்புவார்கள்?

இதனாலேயே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே மஸ்ஜிதை சுத்தம் செய்யும் வேலையில் முழுக்கவனம் செலுத்திவந்திருக்கின்றார்கள். ஹஜ்ரத்ஜைதுப்னு அஸ்லம் (ரலி) கூறுகின்றார்கள், 'நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புனிதகாலத்தில் மஸ்ஜிதுகளில் தண்ணீர்தெளிக்கப் பட்டும் கூட்டப்பட்டும் வந்தது.

ஹஜ்ரத் யாகூப் இப்னு ஜைது (ரஹ்) அவர்கள் அறி விப்பதாவது:- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜி தின் தூசிகளை பேரீத்தமரத்தின் கிளையால் பெறுக்கி சுத் தம் செய்துகொண்டிருந்தார்கள்..

ஹஜ்ரத் யாகூப் இப்னு அப்துல்லாஹ் இப்னுஹன் தப் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள் ஒரு தடவை குதிரையின்மீது ஏறிக்கொண்டு மஸ்ஜிதெகுபாவுக்கு விஜயம் செய்தார்கள். அதில் தொழுதார்கள். பின்பு, ஏ! எர்கா! (ஒருவரின் பெயர்) எனக்கொரு பேரீத்தம் கிளையைக் கொண்டுவந்து கொடு என்றார்கள். அவர்கொண்டுவந்துகொடுத்தபோது, உமர் பாரூக் (ரலி) அவர்கள் தனது இடுப்பை ஒரு துணி யால்கட்டிக்கொண்டு மஸ்ஜித் முழுவதையும் கூட்டிச் சுத் தம் செய்தார்கள்.

ஹஜ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள், எனது உம்மத்தின் நற்கிரியையின் நன்மைகள் அனைத்தும் எனக்கு காண்பிக்கப்பட்டன. எதுவரை என்றால் ஒரு மனிதர் மஸ்ஜிதிலிருந்து அகற்றிய துரும்பும் எனக்கு எடுத்துக்காட்டப்பட்டது. என் உம்மத்தின் பாவங்கள் அனைத்தும் காட்டப்பட்டன. ஒரு மனிதர் குர்ஆனுடைய ஒரு அத்தியாயத்தையோ, அல்லது ஒரு வசனத்தையோ மனனம் செய்து பின்பு மறந்துவிட்டாரே அதனைவிடப் பெரிய பாவம் எதையும் நான் காணவில்லை.

மேலும், ஒரு ஹதீதில் இருக்கிறது. ஒரு மாது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புனிதகாலத்தில் மஸ்ஜிதைக் கூட்டும் வேலையில் ஈடுபட்டிருந்தது. அம்மாது இறந்துவிட்டபோது இராக்காலமாயிருந்ததால் இதனை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்தால் இரவில் வந்து கஷ்டப்படுவார்கள் என நினைத்து சஹாபாக்களே தொழுகை நடத்தி அடக்கம்செய்துவிட்டார்கள். காலையில் இவ்விஷயம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எட்டியபோது, உங்களில் யாராவதொருவர் இறந்துவிட்டால் உடனே எனக்குத் தெரியப்படுத்தவேண்டும். நான் அம்மாதை சுவர்க்கத்தில் கண்டேன். ஏனென்றால், அவர் மஸ்ஜிதிலிருந்து குப்பை கூளங்களை அப்புறப்படுத்திக்கொண்டிருந்தார்'' என்று கூறினார்கள்.

மஸ் அலா:- மஸ்ஜிதில் எச்சில் துப்புவது கூடாது. ''மஸ்ஜிதில் துப்புவது குற்றம்.'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஜ்ரத் அபூ உமாமா (ரலி)

அவர்கள் அறிவிப்பதாவது:- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள், "எம் மனிதன் மஸ்ஜிதில் கிப்லா பக்கம் துப்புவாரோ, பின்பு அதனைச் சுத்தம் செய்யவில்லையோ, அது கியாமத் நாளில் கடினமாகக் கொதித்துவந்து அவரது நெற்றியில் விழும்."

மஸ் அலா:- மஸ்ஜிதுக்குள் வெள்ளைப்பூண்டு வெங்காயம், முள்ளங்கி இவைகளைக்கொண்டு செல்வதும், அல்லது இவைகளைத்தின்றுவிட்டு (வாடையுடன்) உள்ளே செல்வதும் ஆகாது.

ஹஜ்ரத்ஜாபிர் (ரலி) அவர்கள் நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் அறிவிப்பதாவது 'எந்தமனிதர் துர்வாடையான பூண்டை தின்றாரோ, அவர் நமது மஸ்ஜிதின் அருகே வரவேண்டாம். ஏனென்றால், எந்தவஸ்துக்களால் மனிதர்களுக்குத் தொந்தரவு உண்டாகுமோ, அவை அனைத்தாலும் மலக்குகளுக்கும் தொந்தரவு உண்டாகின்றது."

கருத்தாவது:-

எதுவரையில் அதன் துர்வாடை வாயை விட்டு நீங்காதோ, அதுவரையில் மஸ்ஜிதுக்குள் பிரவேசிக்கக்கூடாது. ஹுக்கா, சிகரெட், வெள்ளைப்பூடு முதலிய துர்வாடையான வஸ்துக்களுக்கும் இதேவிதிதான். அங்கீகாரம் பெற்ற பிக்ஹு கிரந்தங்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. தரீகெமுஹம்மதியா என்ற கிதாபில் முள்ளங்கியும் இதேவிதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

Q7:3
N149

எச்சரிக்கை:-

சுருட்டு, ஹுக்கா, பீடி, சிகரெட் குடிப்பவர்கள் பெரும்பாலும் இவ்விஷயத்தில் அலட்சியமாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் இதனை எப்போதும் கவனத்தில் வைப்பார்களாக,

இந்த ஹதீதில் உணவுப்பொருள்பற்றி மட்டும் தெளிவாகக் கூறப்பட்டிருந்தபோதிலும், மனிதர்களுக்குத் தொந்தரவானவைமலக்குகளுக்கும் தொந்தரவானவையே என்ற காரணத்தைக் கவனிக்கும்போது, இவ்விதிஉணவுப் பொருட்களுக்கு மட்டுமல்ல. எனினும், உபயோகிக்கப் படும் எல்லாபொருட்களுக்கும் இதே விதிதான் என்பது தெரிகின்றது.

மஸ் அலா:- ஒரு மனிதனுடைய ஆடையில் வியர்வை முதலியவற்றின் துர்நாற்றம் இருக்குமானால் அத் துர் நாற்றத்தை எவ்வகையிலாவது அகற்றாத வரையில் அவர் மஸ்ஜிதுக்குள் பிரவேசிக்கக்கூடாது.

மஸ் அலா:- மண்ணெண்ணெயை மஸ்ஜிதில் எரிப்பது ஆகாது என்பதும் இதே ஹதீதிலிருந்து ருசுவாகின்றது.

## மஸ்ஜிதில் வாசனைப்புகை போடுவது

மஸ்ஜிதில் ஊதுபத்தி முதலிய வாசனைப்புகை போடுவது சுன்னத்து. சஹாபாக்கள் எப்போதும் இப் பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள், "தங்களது மஸ்ஜிதுகளைவிட்டும் குழந்தைகளையும், பைத்தியக்காரர்

களையும் அகற்றிவையுங்கள். மேலும் அவைகளை உங்களது வியாபாரம், கூச்சல் முதலியவைகளை விட்டும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். தண்டனை கொடுப்பதை விட்டும் வாள் உறுவுவதை விட்டும் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். மேலும் அவைகளின் தலை வாயில்களில் 'ஒலு' செய்யுமிடத்தைக் கட்டாதீர்கள். ஒவ்வொரு (ஜூம்ஆ) வெள்ளிக்கிழமையும் அவைகளில் வாசனைப் புகை போடுங்கள்''.

இந்த நீண்ட ஹதீதில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பல உபதேசங்களில், வெள்ளிக்கிழமை மஸ்ஜிது களில் வாசனைப்புகைபோடுங்கள், என்றும் கூறியுள்ளார்கள்.

இப்னு அபீ ஷைபா (ரலி) ஹஜ்ரத் இப்னு உமர் (ரலி) மூலம் அறிவிப்பதாவது, ''ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மஸ்ஜிதில் வாசனைப்புகைபோட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தோ! தற்காலம் இந்த சுன்னத்து முற்றிலும் கைவிடப்பட்டிருக்கின்றது. மக்கள் மஸ்ஜிதுக்குள்ளே விதவிதமான விபரீதமான ஆடம்பரச்செயல்களைப் புரிகின்றார்கள். ஆனால், இந்த சுன்னத்தின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. இன்று இந்த சுன்னத்து இறந்துவிட்டது. எவர் இதனை உயிர்ப்பிப்பாரோ, இதன்படி மக்கள் அமுல்நடத்திக் கொண்டிருக்கும் காலமெல்லாம் அவருக்கு அதன் நன்மை கிடைத்துக் கொண்டே இருக்கும். ஏனென்றால், ஹதீதில் ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ''

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், எம்மனிதர், என் உம்மத் கெட்டுப்போனபின் எனது சுன்னத்தின்படி நடந்துகொண்டிருப்பாரோ, அவருக்கு நூறு (ஷஹீத்) தியாகிகளின் நன்மை கிடைக்கும்.

## மஸ்ஜிதுக்குச் செல்வதன் ஒழுங்கும் அதன் நன்மையும்

உலகத்திலுள்ள சகல அரசாங்கதர்பார்களுக்கும் நீதி மன்றங்களுக்கும் குறிப்பான ஒழுக்கங்கள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. அதனை ஒவ்வொருவரும் அறிந்திருக் கின்றனர். மஸ்ஜிதானது, எல்லா அரசர்களையும் படைக் கக்கூடிய ஏக இறைவனின் மகத்துவமிக்க தர்பாராக இருக்கின்றது. ஆகையால், அதற்கும் சில ஒழுக்கங்கள் இருக்கின்றன. அவைகளை இந்ததர்பாரின் நிர்வாகியாகிய நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத் திருக்கின்றார்கள். அவைகளையறிந்து அவைகளுக்கேற்ப நடந்துகொள்ள முயல்வது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும்.

அவ்வொழுக்கங்கள் கீழ் வருமாறு:—

எப்போது ஒருவர் மஸ்ஜிதுக்குச் செல்லநாடுவாரோ, அவர் முதலில் நல்லவிதமாக துப்புரவும் ஒலூவும் செய்து கொண்டு மஸ்ஜிதின்பக்கம்செல்வது அவசியம். ஏனெனில், ஹதீதில் வந்திருக்கின்றது, "எவர் தனது வீட்டிலிருந்து பரிசுத்தமாக பர்லான தொழுகைக்காக புறப்படுவாரோ, அவருக்கு, இஹ்ராம்கட்டிச்சென்று ஹஜ்ஜு செய்தவர் அடையும் நன்மைக்குச் சமமான நன்மை கிடைக்கும்.

மேலும் எவர் காலைத் தொழுகைக்காக சுத்தத்தோடு மஸ்ஜிதுக்குச் செல்வாரோ, அவருக்கு ஒரு உம்ரா செய்தவருக்குச் சமமான நன்மை கிடைக்கும். ஆனால், அவர் மஸ்ஜிதுக்குச் செல்லும் நோக்கம் அத்தொழுகையைத் தவிர வேறொன்றாக இருக்கக்கூடாது. ஏனென்றால், மற்றொரு ஹதீதில் வந்திருக்கிறது. "எந்தமனிதர் எந்தவேலைக்காக மஸ்ஜிதுக்கு வருவாரோ, அதுவே அவரது பாகமாகஇருக்கும்''. அதாவது, எவர், தொழுகை, அல்லதுஅல்லாஹ்வை தியானிப்பதற்காக வருவாரோ, அவருக்கு அதுவே கிடைக்கின்றது. ஏதாவது உலகநலத்திற்காக செல்வாரேயானால் நன்மைகளில் அவருக்கு பாகம் கிடைக்காது. எனினும், அவர் எதற்காக மஸ்ஜிதுக்குச் செல்வாரோ, அதுவே அவரது பங்காகும்.

ஹஜ்ரத்உக்பா இப்னு ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:— நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள், "எவர் தனதுவீட்டிலிருந்து மஸ்ஜிதை நோக்கிச்செல்கின்றாரோ, அப்போது அவரது நன்மைகளை எழுதக்கூடிய 'மலக்கு' அவரது ஒவ்வொரு காலடிக்கும் பத்து பத்து நன்மைகளை எழுதுகின்றார்.''

ஹஜ்ரத்ஜைதிப்னுதாபித் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், "நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொழுகைக்காக மஸ்ஜிதை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். அப்போது அன்னவர்கள் (ஸல்) மெல்ல மெல்ல அடி எடுத்துவைத்து நடந்துகொண்டிருந்தார்கள்.''

ஹஜ்ரத் அபூ உமாமா என்னும் சஹாபீ ஒரு தடவை ஜனங்களை நோக்கிக் கூறியதாவது, "நான் (மஸ்ஜிதுக்குச் செல்லும்போது) சிறிய சிறிய எட்டுவைத்து ஏன் நடக்கின்றேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதன் காரணமாவது, அடியான் எதுவரையில் தொழுகையின் நோக்கத்திலும் தயாரிப்பிலும் இருக்கின்றானோ அதுவரையில் அவன் தொழுகையில் இருப்பதாகவே கருதப்படுகின்றான்."

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள், "எவர் அதிக தூரத்திலிருந்து நடந்து வருகிறாரோ, அவருக்கு தொழுகையில் எல்லோரையும்விட அதிக நன்மை கிடைக்கின்றது."

மேலே சென்ற ஹஜ்ரத்ஜாபிர் (ரலி) அவர்களின் ஹதீதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஏ! பனூ சல்மா! தங்களது முந்திய வீடுகளிலேயே வசியுங்கள். உங்களது காலடிகள் நன்மைகளில் எழுதப்படும்" என்று கூறினார்கள். ஆனால், இதிலிருந்து, மஸ்ஜிதின் சமீபத்தில் வசிப்பது எத்தகைய விசேஷத்தையும் உடையதல்ல என்று கொள்ளலாகாது. ஏனென்றால், மஸ்ஜிதின் அண்டையில் வசிப்பதன் சிறப்பின் விபரம் மேலே கூறப்பட்டுள்ளது. மஸ்ஜிதை அடுத்திருப்பவர்கள், அண்மையின் காரணமாக அடைந்துகொள்ளக்கூடிய நன்மைகளில் பல வகைகளும் பல தரங்களும் உண்டு. தூரத்திலுள்ளவர்கள் அதிக நடையின் காரணமாகவே தமது நன்மைகளை அதிகமாக்கிக்கொள்ள முடியும். கருணாநிதியாகிய

இறைவனின் அருள்வாசல் ஒவ்வொருவருக்காகவும் ஒவ்வொரு நேரமும் திறந்தே இருக்கின்றது.

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானுர்கள் "மனிதன் கூட்டமாகத்தொழுவதானது, வீடு அல்லது கடையில் தனியே தொழுவதைவிட 25 மடங்கு அதிக நன்மையை வைத்திருக்கின்றது. இவ்வதிக நன்மை ஏன் கிடைக்கிறதென்ருல், அவன் ஒலூ செய்கின்ருன். மேலும் ஒலூவை சுன்னத்து, முஸ்தஹப்புகள் உடன் செய்கின்ருன். பின்பு மஸ்ஜிதை நோக்கிச் செல்கின்ருன். மேலும், தொழுகைக்காகவென்றே புறப்படுகின்ருன். அவன் அடி எடுத்துவைக்கும்போது ஒவ்வொரு அடிக்கும் பதிலாக அவனது ஒரு நன்மை உயர்த்தப்படுகின்றது. ஒரு பாவம் மன்னிக்கப்படுகின்றது. எப்போது தொழுகின்ருனே, தன் இடத்தில் அமர்ந்திருக்கும்வரையில் மலக்குகள் அவருக்காக, ஏ! இறைவ! இவர்மீது அருள் புரிவாயாக.' இறைவா! இவர்மீது அருள்புரிவாயாக!! என்று பிரார்த்தனை புரிந்துகொண்டே இருக்கின்ருர்கள்."

மற்ருெரு அறிவிப்பில் இருக்கின்றது, எதுவரையில் அவர் அங்கு பிறருக்கு தொந்தரவு செய்யமாட்டாரோ, இன்னும் ஒலூவை முறிக்க மாட்டாரோ, அதுவரையில் மலக்குகள் தங்கள் பிரார்த்தனையில், "இறைவா! இவரை மன்னித்தருள்வாயாக! இறைவா! இவரதுபாவமன்னிப்பை ஏற்றுக்கொள்வாயாக!! என்றும் கூறுகின்ருர்கள்.

மஸ்அலா:—மஸ்ஜிதுக்குச் செல்லும்போது அமைதியாகவும் கம்பீரமாகவும் செல்லுவது அவசியம். அவசரமாக ஓடக்கூடாது. மஸ்ஜிதின் தலைவாயிலை அடையும் போது, "இறைவா! எனக்கு உனது அருள் வாயிலைத் திறந்துவிடுவாயாக! மேலும், என்னை மன்னித்தருள்வாயாக!! என்ற பிரார்த்தனையைப் புரிந்துகொண்டே மிகஒழுக்கமாகவும் பயபக்தியாகவும் மஸ்ஜிதுக்குள் நுழையவேண்டும்.

சம்பவம்:—முற்காலமகான்களில் ஒருவர், மஸ்ஜிதின் வாயிலை அடைந்தபோது அச்சத்தால் அவரது நிறம் மஞ்சணித்துக் கொண்டிருந்தது. மக்கள் இதன் காரணத்தை அவரிடம் வினவியபோது, "ஜனங்கள் இவ்வுலக அதிகாரியொருவரின் தர்பாருக்குச் செல்லும்போது அவர்கள் மீது அவ்வதிகாரியின் பயம் ஏற்பட்டு விடுகின்றது. மேலு , நீதிமன்றத்தின் ஒழுக்கத்திற்கும் அதிகாரியின் கௌரவத்திற்கும் முரணானகாரியம் எதுவும் நிகழ்ந்துவிடுமோ என அஞ்சுகின்றார்கள் அப்படியிருக்க, ஒருதாழ்மையான அதிகாரிக்குச் செலுத்தப்படும் மரியாதையளவாவது அதிகாரிகளுக்கெல்லாம் சர்வாதிகாரியாகிய இறைவனது தர்பாருக்கு நான் செலுத்தவேண்டாமா? இந்த தர்பாரின் கண்ணியத்திற்கு விரோதமான ஏதாவதொரு காரியம் நிகழ்ந்துவிடுமோ என்ற அச்சத்தால் தான் எனது நிறம் மஞ்சளாகிவிடுகின்றது", என்றார் அப்பெரியார்.

பின்பு மஸ்ஜிதில் பிரவேசித்தால் உட்காருமுன் இரண்டு 'ரக்அத்' தொழுது கொள்வது முஸ்தஹப்பு. அதற்கு 'தஹிய்யதுல்மஸ்ஜிது' என்று சொல்லப்படும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை போதித்திருக்கின்றார்கள்.

மஸ்அலா:— ஆனல், இந்த "தஹிய்யதுல் மஸ்ஜித்" தொழுகையானது ளுஹர், அசர், இஷா ஆகிய இம்மூன்று வேளைகளில்மட்டுமே முஸ்தஹப்பு, பஜ்ரு தொழுகைக்கு முன்னும் பஜ்ருடைய சுன்னத்தைத்தவிர வேறு நபில் தொழுகக்கூடாது. மஃரிப் தொழுகைக்கு முன்னும் எவ்வித நபில் தொழுவதும் முஸ்தஹப்பு ஆகாது.

மஸ் அலா:—எம்மனிதர் அதிகமாக மஸ்ஜிதுக்கு வந்து கொண்டிருப்பாரோ, அவர் ஒவ்வொரு நாளும் ஒரு தடவை இரண்டு ரக் அத் மட்டும் தொழுதுகொள்வது தஹிய்யதுல் மஸ்ஜிதுக்காகப் போதுமாகும்.

## மஸ்ஜிதில் செய்யத்தகாத அல்லது மக்ரூஹான காரியங்கள்

மஸ் அலா:- எவருக்கு ஸ்நானம்செய்வது கடமையாக இருக்கின்றதோ அவர் மஸ்ஜிதுக்குள் பிரவேசிப்பதுஹராம். இவ்வாறே மாதவிடாய், பிரசவத்தீட்டுக்காரப் பெண்களும் மஸ்ஜிதுக்குள் செல்வதுஹராம். ஆனல், ஈதுகாஹ், மத்ரசா, கான்காஹ், முதலிய இடங்கள் இவ்விஷயத்தில் மஸ்ஜிதின் விதியில் சேரமாட்டா.

மஸ் அலா:- மஸ்ஜிதுக்குள் அசுத்தத்தை நுழைய வைப்பதும்ஹராம். இதனுலேயே அசுத்தமான எண்ணெய்யை மஸ்ஜிதுக்குள் எரிப்பதும் ஆகாது. அதனை மஸ்ஜிதுக்கு வெளியே எரிப்பது ஆகுமானுலும் சரியே.

மஸ் அலா:- குழந்தைகளிலும் பைத்தியக்காரர்களிலும் அசுத்தமிருக்குமென்ற சந்தேகம் மிகையானல்

அவர்களை மஸ்ஜிதுக்குள் அனுமதிப்பது ஹறாம். இன் றேல்மக்ரூஹ். "குழந்தைகளையும் பைத்தியக்காரர்களையும் மஸ்ஜிதைவிட்டு விலக்கிவையுங்கள்" என ஹதீதில் வந் திருக்கின்றது.

மஸ் அலா:- மஸ்ஜிதுக்குள் பிரேதத்தைக்கொண்டு போவது ஆகாது. அதனுள் ஜனசா தொழுவது மக்ரூஹ் ஆனல், மஸ்ஜிதின் முற்றத்தில் இதற்கென்றே கட்டப்பட் டிருக்கும் மேடை முதலியவைகளில் ஜனசா தொழுகை நடத்துவது மக்ரூஹ் அல்ல. அவை மஸ்ஜிதின் வெளிப் பாகத்தைச் சேர்ந்தவைகளாகும்.

மஸ் அலா:- பேன், மூட்டைப்பூச்சி முதலியவை களைக்கொன்று மஸ்ஜிதில்போடுவது மக்ரூஹ்.

மஸ் அலா:- மஸ்ஜிதுக்குள் சிறுநீர் கழிப்பது ஹறாம். அதை ஒரு பாத்திரத்தில் பிடித்துக்கொண்டபோதிலும் சரியே. இவ்வாறே இரத்தம் குத்தி வடிப்பதும் ஹறாம். அதை ஒரு பாத்திரத்தில் பிடித்துக்கொண்டாலும் சரியே.

மஸ் அலா:- மஸ்ஜிதின் பாகங்களிலிருந்து செங்கல் சுண்ணாம்பு முதலிய எதாவதொரு வஸ்துவை எடுப்பதும் ஆகாது. இவ்வாறே மஸ்ஜிதின் தளத்திலிருந்து மண்ணை எடுப்பதும் கூடாது. ஆனல், ஓரிடத்தில் குவிந்துகிடந் தால் அல்லது 'பரக்கத்து'க்காக சிறிது எடுத்துக்கொண் டால் ஆகும். கஃபாஷரீபின் மண்ணுக்கும் இதே விதி தான். ஆனல் மஸ்ஜிதின் தளம் கெட்டியான செங்கல் அல்லது கல்லால் ஆயிருக்காவிட்டால்தான் இது ஆகும். தளம் கெட்டிக்கப்பட்டதாயிருந்தால் அங்கிருந்து

மண்ணை யகற்றுவது மஸ்ஜிதை சுத்தப்படுத்துவதில் சேர்ந்ததும் நன்மையுமாகும்.

மஸ் அலா:- மஸ்ஜிதில் எச்சில் துப்புவது ஹராம். இதன் விபரம் 'மஸ்ஜிதின் பரிசுத்தம்' என்ற தலைப்பின் கீழ் சென்றுவிட்டது.

மஸ் அலா:- மஸ்ஜிதுக்குள் ஒலூசெய்வதும்வாய் வாய் கொப்பளிப்பதும் ஆகாது. கழுவப்பட்ட தண்ணீரை ஒரு பாத்திரத்தில் சேகரித்துக்கொண்டாலும் சரியே.

மஸ் அலா:- ஆனால், (முஃதகிப்) நன்மையை நாடி மஸ்ஜிதிலேயே தங்கியிருப்பவர் மஸ்ஜிதுக்குள்ளேயே இருந்து ஒலூசெய்துகொள்வதும் காலைக் கழுவிக்கொள்வதும் ஆகும். ஆனால், கழுவிய நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்துக்கொள்ள வேண்டும். அது மஸ்ஜிதில் விழலாகாது. இன்றேல் அவருக்கும் ஆகாது. அனுமதியில்லை.

மஸ் அலா:- மஸ்ஜிதுக்குள் கிணறு தோண்டுவது கூடாது. ஆனால், ஏற்கனவே தோண்டப் பட்டதாயிருந்தால் அதை அப்படியே வைத்திருக்கலாம்.

மஸ் அலா:- மஸ்ஜிதுக்கு இரண்டு வாயில்கள் இருந்தால் ஒன்றின் வழியாக உள்ளே சென்று மற்றொன்றின் வழியாக வெளியே செல்வதும் மஸ்ஜிதை நடைபாதையாக உபயோகப்படுத்துவதும் ஆகாது. ஆனால் எப்போதாவது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தை முன்னிட்டு எதிர்பாராது மஸ்ஜிதின் வழியாகச் சென்று விட்டால் பாதகமில்லை. அப்படியே வழமைப் படுத்துவது ஆகாது. அவ்வாறு செய்கின்றவன் பாவி.

மஸ் அலா:- மஸ்ஜிதில் மரம் வளர்ப்பதும் ஆகாது. ஆனால், வெள்ளம், ஓதம் முதலியவைகளைத் தடுப்பதற்காக மரம் வளர்த்தால் பாதகமில்லை.

மஸ் அலா:- மஸ்ஜிதில் துணிதைத்தல், தொப்பி பின்னல், நகை செய்தல் முதலிய கைத்தொழில் செய்வது ஆகாது. பொதுவாக எல்லா வகையான கைத்தொழிலும் மஸ்ஜிதில் விலக்கப்பட்டதாகும். எது வரையில் என்றால், ஹதீது, தப்ஸீர், பிக்ஹு மஸாயில்களைக்கூட ஊதியத்திற்கு மஸ்ஜிதில் உட்கார்ந்து எழுதுவதும் கூடாது.

மஸ் அலா:- பிள்ளைகளுக்கு குர்ஆன் ஷரீப் முதலிய பாடங்களை ஊதியம் பெற்றுக்கொண்டு மஸ்ஜிதுக்குள் கற்றுக்கொடுப்பது ஏகோபித்த முடிவின்படி ஆகாது. ஊதியம் இன்றி நன்மைக்கென்றே படித்துக் கொடுப்பதை சில மார்க்க நிபுணர்கள் அனுமதித்துள்ளார்கள். சிலர் இதனையும் அனுமதிக்கவில்லை, ஏனென்றால், ஹதீதின் பிரகாரம் சிறுவர்களை மஸ்ஜிதுக்குள் பிரவேசிக்க விடுவதே கூடாது.

மஸ் அலா:- ஒருமனிதர் மஸ்ஜிதைக் காவல்காக்கும் நோக்கத்தோடு அங்கே உட்கார்ந்துகொண்டுகைத்தொழில் செய்வாராகின், மேலும் மஸ்ஜிதைப் பாதுகாக்க இதைத் தவிர வேறுவழியில்லையாகின் அது பாதகமில்லை.

மஸ் அலா:- ஒரு தொல்லையின் காரணமாக மஸ்ஜிதுக்குள் உட்கார்ந்து கொள்வது மக்ரூஹ். இதன் விபரம் இந்நூலின் அனுபந்தமாகிய தாபுல் மஸாஜிதில் பார்த்துக் கொள்க.

மஸ் அலா:- மஸ்ஜிதில் விவாக ஒப்பந்தம் நடத்தி வைப்பது முஸ்தஹப்பு. இதன் விபரம் அனுபந்தத்தில் காண்க.

மஸ் அலா:- மஸ்ஜிதில் ஸ்திரீபோகம் செய்வதும் மலங்கழிப்பதும் ஹராம். ஏதாவதொரு பாத்திரத்தில் கழித்தாலும் சரியே. இந்த எல்லா விஷயங்களிலும் மஸ்ஜிதின் மேற்பாகமும் மஸ்ஜிதின் விதியையே பெற்றிருக்கின்றது. ஏனென்றால், எந்த இடத்தில் மஸ்ஜித் இருக்கின்றதோ, அதன் மேற்பகுதி வானம் வரையிலும் அதே நியதியில் வைக்கப்படவேண்டும். ஆனால், மஸ்ஜிதின் அஸ்திவாரம் கட்டும் போதே அதன் மேற்பாகமாவது அல்லது கீழ்பாகமாவது, கீழ்வீடு அல்லது கடைக்காக என்று மஸ்ஜிதிலிருந்து ஒதுக்கப்படுமானால் அது மஸ்ஜிதின் விதியில் சேராது. இவ்வாறு ஒதுக்கும் இடத்தின் வருமானம் மஸ்ஜிதுக்காக வக்பு செய்யப்பட்டால்தான் இவ்வாறு ஒதுக்குவதும் ஆகும்

மஸ் அலா:—எம்மனிதன் ஏதாவதொரு துர்வாடையான பதார்த்தத்தைப் புசித்தானோ, அவனுடைய வாயிலிருந்து துர்வாடையை நீக்கிக்கொள்ளும்வரையில் அவன் மஸ்ஜிதுக்குள் பிரவேசிப்பது கூடாது.

ஹதீதில் வந்திருக்கிறது:— நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள், "வெங்காயம் அல்லது வெள்ளைப்பூண்டைத் தின்றமனிதன் நமது மஸ்ஜிதுகளை விட்டு விலகி இருக்கவும். ஏனென்றால், எந்த வஸ்துக்களால் மனிதர்களுக்குத் தொந்தரவு ஏற்படுகின்றதோ அந்த வஸ்துக்களால் மலக்குகளுக்கும் தொந்தரவு உண்

டாகின்றது. இது 'மஸ்ஜிதின் பரிசுத்தம்' என்ற தலைப்பில் வந்திருக்கின்றது. தப்ரானீஉடைய அறிவிப்பில் முள்ளங்கியையும் வெங்காயம் வெள்ளைப்பூண்டு இவைகளுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் எந்த மனிதனது வாயில் வெங்காயம் முதலியவைகளின் துர்வாடை காணப்படுமோ அவனது கையைப்பிடித்து மஸ்ஜிதை விட்டு வெளியேற்றப் பட்டுக்கொண்டிருந்தது.

அல்லாமா இப்னு கையிம் (ரஹ்) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நறுமணம் என்பது பற்றி குறிப்பிடும்போது, எந்தமனிதன் முள்ளங்கி தின்பதற்கு முன் ஆரம்பத்திலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது 'ஸலவாத்' ஓதுவாரோ அவரது வாயில் துர்வாடை ஏற்படாது'' என்று எழுதுகிறார்.

மஸ் அலா:—வாய்நாற்றமுடையவரும் வெங்காயம் தின்றவரே போலாவார்.

மஸ் அலா:—வாய்நாற்றமுடையவரையும் வெங்காயம் வெள்ளைப்பூண்டு தின்றவரையும் இதர தொழுகையாளிகள் தங்கள் பக்கத்தில் நிற்கவிடாது தடுக்க உரிமையுண்டு.

மஸ் அலா:—ஹுக்கா, சிகரட் குடிப்பவர்களுக்கும் புகையிலை உபயோகிப்பவர்களுக்கும் எல்லா விஷயங்களிலும் இதே விதிதான். புகையிலை வாடையை நீக்காதவரையில் மஸ்ஜிதில் நுழைவது கூடாது.

மஸ் அலா:—குஷ்டரோகிகள் மஸ்ஜிதின் குடங்கள், கிண்ணங்களில் தண்ணீர் பருகுவதைத்தடுக்கலாம்.

மஸ் அலா:—எந்த மனிதனுடைய ஆடையில் வியர்வையின் துர்நாற்றம் இருக்குமோ, அல்லது, செக்காட்டுகிறவர், பாதரட்சை தைப்பவரது ஆடையில் ஏதாவது துர்வாடை இருக்குமானுல் அவர்களுக்கும், வெங்காயம் வெள்ளைப்பூண்டு தின்றவர்களின் விதியேதான். துர்நாற்றமுள்ள ஆடையைக் களையாதவரையில் அவர்கள் மஸ்ஜிதுக்குள் பிரவேசிப்பது கூடாது.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றூர்கள், “செக்காட்டுகிறவர் செருப்புத்தைப்பவர் முதலியவர்களின் ஆடை சுத்தமாயில்லாவிட்டால் அவர்கள் தொழுகையில் முன்வரிசையில் நிற்கக்கூடாது. கடைசி வரிசையில் நிற்க வேண்டும்.

மஸ் அலா:- துஷ்ட மனிதர்களையும் பிராணிகளையும் மஸ்ஜிதைவிட்டுத் தடுக்கவேண்டும்.

மஸ் அலா:- மஸ்ஜிதின் உள்ளே ஜனுசா தொழுவது மக்ரூஹ்.

மஸ் அலா:- ஜனுசாவை மஸ்ஜிதுக்கு வெளியே வைத்து ஜமா அத் மஸ்ஜிதின் உள்ளே நின்று தொழுதால் அதுவும் மக்ரூஹ். ஆனுல், அவசியத்திற்காகச் செய்தால் ஆகும். இதன் முழு விபரம் அனுபந்தத்தில் காண்க.

மஸ் அலா:- மஸ்ஜிதில் நிகாஹ்வைத்தவிர இதர வியாபாரம், விற்பனை — வாங்கல் முதலிய அனைத்தும்

ஆகாது. இஃதிகாப் இருப்பவருக்கு அவசியத்திற்கேற்ப ஆகும். ஆனால், வியாபாரச் சாக்குகளை மஸ்ஜிதுக்குள் கொண்டு செல்லக்கூடாது என்பது ஷாத்து.

மஸ் அலா:- காணாமற்போன பொருளுக்காக மஸ்ஜிதுக்குள் சப்தமிட்டு தேடுவதும் ஆகாது. ஆனால், மஸ்ஜிதுக்குள்ளேயே ஒரு பொருள் தவறிவிட்டால் அதனை அங்கே உள்ளவர்களிடம் விசாரிக்கலாம்.

மஸ் அலா:- மஸ்ஜிதுக்குள் பாடல்கள் பாடுவதும் உணவருந்துவதும் நித்திரை செய்வதும் கூடாது. ஆனால், உபதேசமாகிய பாடல்களாயிருந்தால் அல்லது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகழாகவோ அல்லது இஸ்லாமிய தத்துவங்கள்பற்றியதாகவோ இருந்தால் தொழுகிறவர்களுக்கும், தியானத்திலுள்ளவர்களுக்கும் இடஞ்சல் உண்டாகாதவகையில் அப்பாடல்களை மஸ்ஜிதுக்குள் பாடலாம்.

மஸ் அலா:- முசாபிர் (பிரயாணியும்) இஃதிகாப் இருப்பவரும் மஸ்ஜிதில் உண்பதும் உறங்குவதும் ஆகும்.

## உலக விவகாரங்களை மஸ்ஜிதில் பேசுவது

மஸ்ஜிதுக்கு வெளியே பேசக்கூடிய, ஆகுமான விஷயங்களை மஸ்ஜிதுக்குள்ளே பேசுவது கூடாது. மேலும், எவ்விஷயங்கள் மஸ்ஜிதுக்கு வெளியிலும் பேசுவது கூடாதோ, அத்தகைய விஷயங்களை மஸ்ஜிதுக்குள்ளே பேசுவது கடினமான ஹராம். 'பத்ஹுல் கதீர்' என்ற நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. "மஸ்ஜிதில் உலக விவ

காரங்களைப் பேசுவதானது, நன்மைகளைத் தின்றுவிடும். நெருப்பு விறகைத் தின்பதுபோல். 'கஜானதுல் பிக்ஹு' என்ற நூலில் இருக்கிறது, "எவர் உலக விவகாரங்களை மஸ்ஜிதில் பேசுவாரோ, அவரது நாற்பது வருடத்திய நற் கிரியைகளை இறைவன் அழித்துவிடுகின்றான்."

மஸ் அலா:- பேசுவதற்கென்றே மஸ்ஜிதில் உட்காரக்கூடாது. எனினும், எதிர்பாராதவிதத்தில் ஏதாவதொரு உலக சம்பந்தப்பட்ட அவசியமாய விஷயம் வந்துவிட்டால் மெதுவாகக் கூறிவிடுவது பாதகமில்லை. ஆயினும், அதைவிட்டுத் தவிர்ந்துகொள்வதே மேல். அவ்வாறேதான் சஹாபாக்களும் மகான்களும் நடந்து வந்திருக்கிறார்கள்.

சம்பவப்:—ஹஜ்ரத் கலப் (ரலி) அவர்கள் மஸ்ஜிதில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களது அடிமைவந்து ஏதோ ஒரு விஷயத்தை அவர்களிடம் கேட்டான். அவர்கள் அங்கிருந்து எழுந்து மஸ்ஜிதுக்கு வெளியே வந்து பதில் அளித்தார்கள்.

மஸ் அலா:—மஸ்ஜிதில் சப்தமிட்டு திக்ரு செய்வது, குர் ஆன் ஓதுவது, முதலியன ஆகாது. ஆனால், மஸ்ஜிதில் யாராவது தொழுகை, தஸ்பீஹ் முதலியவைகளில் ஈடுபட்டிராவிடில் சில உலமாக்கள் அதனை அனுமதித்துள்ளார்கள். வேறு சில உலமாக்கள் பொதுப்படையாகவே, சப்தமிட்டு ஓதுவதையும் திக்ரு செய்வதையும் ஆகாது எனக்கூறியுள்ளார்கள்.

எச்சரிக்கை:—பரிதாபம்! ஜனங்கள் தற்காலத்தில் இதனைப்பற்றி மிகமிக அலட்சியமாகவே இருக்கின்றார்கள். பெரும்பாலும் உலக விவகாரங்களிலேயே இவ்வளவு கூச்சலிடுகின்றார்கள். நாகரீகமான மக்களின் சாவடிகளிலும், மடங்களிலும் கூட இவ்வாறு நடக்கமுடியாது. இறைவன் காப்பாற்றுவானாக! இஸ்லாமியஷரீ அத்தோ, மஸ்ஜிதில் சப்தமிட்டு திரு குர்ஆனை ஓதுவதையும் திக்ரு செய்வதையும் கண்டிக்கின்றது. மேலும், "கடைவீதியின் கூச்சலைவிட்டுப் பரிசுத்தமாக வையுங்கள்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறியிருக்கின்றார்கள். ஆனால், இஸ்லாமியர் என்று தாவா செய்து கொள்பவர்கள் உலக விவகாரங்களால் மஸ்ஜிதைக் கடைவீதியின் நமூனாவாக ஆக்கிக்கொள்கின்றார்கள்! அல்லாஹ்வின் பரிசுத்தமான மலக்குகள் அவர்களது அக்கிரமமான கரங்களால் மனம் நொந்துபோயினர். ஆனால், அவர்கள், மஸ்ஜிதிலிருந்து புண்ணியமூட்டையைக் கட்டிக்கொண்டு செல்கிறோம் என சந்தோஷமடைகின்றார்கள். புண்ணியத்தைப்பற்றிப் பேசுவது எங்கே? முன்பு கொஞ்சம் நஞ்சம் செய்திருந்த புண்ணியங்கள்கூட இந்த அலட்சியம் அவமரியாதைக்கு எங்கே அர்ப்பணமாகிவிடப் போகின்றனவோ! என்னவோ! எப்போது, ஆகுமான கூச்சலால் மனிதர்களுக்கும் மலக்குகளுக்கும் நோவினை ஏற்படுகின்றதோ, அப்போது இத்தகாத ஒழுங்கற்ற அமலியால் ஒன்றும் நோவினை ஏற்படாதா? மலக்குகள் இதற்காக சபிக்கமாட்டார்களா? நன்குஞாபகமிருக்கட்டும்; எவர்கள் மஸ்ஜிதில், தஸ்பீஹ்' தஹ்லீல், தொழுகைமுதலியவைகளில்ஈடுபட்டிருக்கும்மனிதர்களுடையவும் மலக்குகளுடையவும் தியானத்திலும்சிந்தனையிலும் இடையூறுஉண்டாக்குமாறு கூச்சலிடு

வார்களோ, அவர்கள் கீழ்காணும் திரு குர்ஆனின் வசனத்திலுள்ள கடும் எச்சரிக்கைக்கு ஆளாகின்றார்கள்.

"அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளில் அவனது வணக்கத்தைவிட்டு விலக்கி மேலும் அவைகள் பாழாகுவதில் முயற்சிப்பானே, அவனைவிட அதிஅக்கிரமக்காரன்யார்?

இந்த ஆயத்தானது 'குப்பார்' களின் விஷயத்தில் இறங்கியிருந்த போதிலும் முஸ்லிம்களுக்கு இன்னும் அதிக பயமூட்டும் விஷயமாயிருக்கும். ஏனெனில், அவர்களது செய்கைகள் 'காபிர்' களின் செய்கைக்கு ஒப்பாகத் தொடங்கிவிட்டன. மேலும் ஆயத்தில் அல்லாஹ்வின் தியானத்தை விட்டு விலக்குவது, மஸ்ஜிதுகளின் நாசத்தில் முயற்சிப்பது என்பதன் கருத்து, குப்பார்கள் மஸ்ஜிதைப் பூட்டி அடைத்து விட்டார்கள் அல்லது அதனை இடிப்பதற்கு முயன்று கொண்டிருந்தார்கள் என்பதல்ல. ஏனென்றால் இக்கருத்து சம்பவங்களுக்கு முரண்பட்டதாகும். எனினும், வணக்கத்தைத்தடுப்பது, மஸ்ஜிதை பாழ்படுத்துவது என்பதன் கருத்தானது, அவர்கள் கூச்சல், அமளியின் மூலம் அல்லாஹ்வின் தியானத்தைத் தடுக்கக்கூடிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். மேலும் இதனையே மஸ்ஜிதின் நாசம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஏனெனின், தொழுகை திக்ரு முதலியவைகளால் மஸ்ஜிது அலங்காரமாகின்றது. அவைகள் இன்றேல் அது பாழ்படுகின்றது. எவர்களின் அடங்காப்பிடாரித்தனத்தால் ஜனங்களின் தொழுகைக்கும் தியானத்திற்கும் இடையூறு உண்டாகின்றதோ அத்தகைய முஸ்லிம்கள் சிறிது அல்லாஹ்வுக்கு அஞ்சுவார்களாக!

சம்பவம்:- ஒருதடவை ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். ஒரு மனிதர் ஏதோ சில சாமான்களைக் கொண்டு வந்து வரிசைக்கு முன்னால் அதை போட்டு விட்டுத் தொழுகையில் கலந்து கொண்டார். உமர் பாரூக் (ரலி) அவர்கள் தொழுகையை முடித்தபின் அம்மனிதரை தண்டித்தார்கள். மேலும், "நீர் தொழுகையாளிகளை மனக்குழப்பத்தில் ஆக்கிவிட்டீர்" என்று கடிந்துரைத்தார்கள்.

தொழுபவர்களின் கவனத்தைத் திருப்பக்கூடிய முறையில் அவர்களுக்கு முன்னால் எந்த வஸ்துவையும் போடுவதும் அகற்றுவதும் கூடாது என்பது இச் சம்பவத்திலிருந்து தெரிகிறது. ஆனால், தொழுபவர்களுக்கு இடையூறு இன்றி, தனது சாமான்களை பந்தோபஸ்துக்காக மெதுவாய் முன்னால் வைத்துக்கொள்வது குற்றமல்ல.

மஸ் அலா:- மஸ்ஜிதில் காற்றை வெளிவிடுவதும் ஆகாது. ஏனெனின், மனிதர்களுக்கு வெறுப்பூட்டும் ஒவ்வொன்றும் மலக்குகளுக்கும் வெறுப்பூட்டுகின்றது.

எச்சரிக்கை:- இஃதிகாப் இருப்பவரும் இதிலிருந்து விதிவிலக்கானவரல்ல. மலஜலம்கழிப்பதற்கென மஸ்ஜிதை விட்டு வெளியேற வேண்டியது அவசியம் போன்றே இதற்கெனவும் வெளியேற வேண்டும்.

மஸ் அலா:- மஸ்ஜிதில் சண்டை சச்சரவு செய்வது கூடாது.

மஸ் அலா:- மஸ்ஜிதில் விரிப்பு விரிப்பதும் விளக்கு எரிப்பதும் சுன்னத்து. ஆனால் தேவைக்கேற்பவே செய்ய வேண்டும்.

மஸ் அலா:- மஸ்ஜிதின் விளக்குஇரவின் மூன்று பகுதிகளில் முதற்பகுதி வரையில் மட்டுமே எரிக்கலாம். அதன் பிறகு ஒருவர் உட்கார்ந்திருப்பரேல் அவர் தனது சொந்த விளக்கை எரித்துக்கொள்ள வேண்டும். ஆனால் சந்தாக் கொடுப்பவர்கள் இரவு முழுதும் விளக்கு எரிப்பதற்குத் தெளிவாக அனுமதிப்பார்களாயின் இரவெல்லாம் எரிக்கலாம்.

மஸ் அலா:- குறிப்பான இரவுகளில் உதாரணமாக, ரமலானின் இரவுகளில், அல்லது குர் ஆன்முடிக்கும் இரவில் அதிகமான விளக்குகளையோ அல்லது குளோப் லைட்டுகளையோ ஏற்றி வெளிச்சம்போடுவது (பித்அத்) அனாச்சாரமும் ஆகாத காரியமுமாகும். மேலும் அதில் அனேக கெடுதிகள் பொதிந்திருக்கின்றன:-

(1) அதில் (மஜூஸி) நெருப்பாராதனைக்காரர்களின் வணக்கத்திற்கும் இந்துக்களின் தீபாவளிக்கும் ஒப்பிருக்கின்றது. மேலும், "எம் மனிதன் எச்சமுதாயத்திற்கு ஒப்பாவானோ, அவன் அச்சமுதாயத்தைச் சேர்ந்தவனே" என்று காபிர்களுக்கு ஒப்பாவதை ஹதீதில் கடினமாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

(2) இவ்விளக்குகளின் காரணத்தால் மஸ்ஜிது விளையாட்டுக் கேளிக்கைகளுக்கு இலக்காகின்றது. சிறுவர்களும் ஒழுக்கமில்லாதவர்களும் கூடிக் கூச்சலிடுகின்றார்கள்.

மஸ் அலா:- எவர், மஸ்ஜிதின் ஒரு தலைவாயிலவழியே உள்ளே சென்று மறுவழியாக வெளியேறும் பழக்கமுடையவராக இருக்கின்றாரோ, அவர் பாவியாவார்.

மஸ்ஜிதில் தனது தொழுகைக்காக ஓரிடத்தைக் குறித்துக்கொள்வது விலக்கப்பட்டதாகும். ஒரு மனிதன் எப்போதும் ஒரே இடத்தில் உட்கார்துகொண்டே இருப்பானாகில் அவ்விடம் அவனுக்கு 'ஷரீஅத்' பிரகாரம் குறிப்பாகிவிடாது. வேறொருவர் அவனுக்கு முன்னால் சென்று அந்த இடத்தில் உட்கார்ந்துகொள்வாராகில், அவரை அவ்விடத்தைவிட்டு எழுப்புவதற்கு உரிமை இல்லை.

மஸ் அலா:- வட்டார (மஹல்லா) க்காரர்கள் ஒரு மஸ்ஜிதை இரண்டாக்கிக்கொள்வதும் அல்லது இரண்டு மஸ்ஜிதை ஒன்றாக்கிக்கொள்வதும் ஆகும்.

மஸ் அலா:- செம்பு, கலயம், பாய் முதலிய ஒரு மஸ்ஜிதுக்குச் சொந்தமான சாமான்களை மற்றொரு மஸ்ஜிதுக்கு இரவலாகக்கொடுப்பது ஆகாது.

மஸ் அலா:- மஸ்ஜிதில் தன் வீட்டுச் சாமான்களை வைப்பது ஆகாது. ஆனால், பொதுவான குழப்பம், சண்டைக் காலங்களில் பொதுவான பயங்கரம் பீதி ஏற்பட்டால் அது சமயம் வீட்டுச் சாமான்களை மஸ்ஜிதில் பூட்டிவைத்துக்கொள்ளலாம்.

மஸ் அலா:- மஸ்ஜிதுக் கதவை பூட்டிவைப்பது ஆகாது. மஸ்ஜிது சாமான்கள் காணமற்போய்விடும் என்ற அச்சம் ஏற்பட்டால், ஓர் ஆள்மூலம் அதனைப் பாது

காக்க வேண்டும். பாதுகாவலுக்கு வேறு வழியில்லா விட்டால் பூட்டிவைத்துக்கொள்ளவது ஆகும். ஆனால், தொழுகை நேரங்களில் திறந்துவிடப்பட வேண்டும்.

மஸ் அலா:- பாய் முதலிய சாமான்கள்வைப்பதற் காக மஸ்ஜிதில் ஒரு சிறிய அறைகட்டிக்கொள்வது ஆகும்.

மஸ் அலா:- மஸ்ஜிதுக்குள்ளிருக்கும் பாய் வகைய றுக்களை வீட்டுக்கோ, அல்லது அறைக்கோ எடுத்துச் செல்வது ஆகாது. மஸ்ஜிதின் செம்பு, கலயம் முதலி யவைகளும் இதே விதியில் சேரும்.

மஸ் அலா:- மஸ்ஜிதின் ஒரு பக்கத்தில் உபதேசம் நடந்துகொண்டிருக்கிறது. மற்றொரு பக்கத்தில் குர்ஆன் ஓதுவது நடந்துகொண்டிருக்கிறது. அப்போது ஆலிம் அல்லாதவர்களும் குர்ஆனின் அர்த்தங்களை அறியாதவர் களும் உபதேசம் கேட்பதேமேல். குர்ஆனின் அர்த்தங் களை அறியக்கூடியவர்கள் குர் ஆனை ஓதுவதேமேல்.

மஸ் அலா:- மஸ்ஜிதின் சுவர்களில் எழுதுவது கூடாது.

மஸ் அலா:- மஸ்ஜிதின் கூறை அல்லது சுவர்களில் வௌவால் அல்லது இதர பிராணிகள் கூடு கட்டியிருக்கு மானால், அதனைக்கலைப்பது ஆகும். ஆனால், மஸ்ஜிதல்லாத இதர இடங்களில் கலைப்பது ஆகாது. ஏனென்றால், “பறவைகளை அவற்றின் கூடுகளிலே வசிக்கவிடுங்கள்” என்று ஹதீதில் வந்திருக்கின்றது.

மஸ் அலா:- மஸ்ஜிதில் இட நெருக்கடி உண்டானால், உட்கார்ந்திருப்பவர்களையும், திக்ரு, குர்ஆன் ஓதுவது பாடம் நடத்துவது, இஃதிகாப் முதலியவைகளில் ஈடுபட்டிருப்பவர்களையும் அவ்விடத்தைவிட்டுக் கிளப்ப தொழுகிறவர்களுக்கு உரிமையுண்டு.

## மஸ்ஜிதுகளின் சில குறிப்பான விதிகள்

மஸ் அலா:- மஸ்ஜிதில் ஜமா அத் நடந்துகொண்டிருக்கும்போது, அணி வகுப்பு (சப்பு) களைவிட்டு விலகி ஒரு மனிதன் இமாமுக்குப் பின்னால் தொடர்ந்துகொண்டு தொழுதால் இவ்வாறு தொடர்வது ஆகும். உதாரணமாக, மஸ்ஜிதின் ஒரு பகுதியில் ஜமாஅத் நடந்துகொண்டிருக்கிறது. இடையே சில அணி வகுப்புகளைவிட்டு விலகி சிலர் அந்த இமாமை தொடர்ந்து தொழுதால் அத்தொழுகை நிறைவேறிவிடும். மஸ்ஜிதைத்தவிர வேறு எந்த இடத்திலும் இவ்வாறு தொடர்ந்து தொழுவதற்கு அணி வகுப்புக்கள் இடையில்லாது சேர்ந்திருக்கவேண்டியது ஷரத்தாகும்.

மஸ் அலா:- மஸ்ஜிதின் சுற்றளவுக்குள் பொதுவாக மூன்று வாயில்கள் இருந்தால், அல்லது அறை முதலியவை கட்டப்பட்டிருந்தால் அல்லது வெறும் முற்றமாக இருந்தால் அதனை, "பினுயெ மஸ்ஜித்" என்று சொல்லப்படும். அதற்கும் இவ்விஷயத்தில் மஸ்ஜிதின் விதியே. அதாவது, "இமாமைத் தொடர்வதற்கு அணிவகுப்புக்கள் சேர்ந்திருக்க வேண்டியது ஷரத்தாகாது.

மஸ் அலா:- இவ்விஷயத்தில் ஈத்காஹ்வுக்கும் மஸ்ஜிதின் விதியே. அனேக விஷயங்களில் அது மஸ்ஜிதின் விதியைவிட்டு விலக்காயிருந்தாலும் சரியே.

எச்சரிக்கை:—மஸ்ஜிதில் அணிவகுப்புக்கள் சேர்ந்திருக்காவிட்டாலும் இமாமைத்தொடர்வது கூடிவிடும், பர்லான தொழுகையும் கடமையைவிட்டு நீங்கிவிடும். ஆனால், இவ்வாறுசெய்வது சரி (ஜாயிஸ்) என்று ஆகிவிடாது. ஏனென்றால், ஜமா அத்தில் அணிவகுப்புக்கள் சேர்ந்திருப்பதும் மத்தியிலுள்ள இடத்தைப் பூர்த்தி செய்வதும் வாஜிபு. மேலும் இதற்கு மாறு செய்வது பற்றி ஹதீதில் கடினமான எச்சரிக்கை வந்துள்ளது. மத்தியிலுள்ள இடத்தைப் பூர்த்தி செய்வது மகத்தான நன்மையை வைத்திருக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள், "ஒன்று, உங்களது அணிவகுப்பைச் செவ்வைப் படுத்திக்கொள்ளுங்கள். அல்லது, அல்லாஹுதஆலா உங்களது முகங்களை மாற்றி விடுவான் என்று.

மஸ் அலா:—எம்மஸ்ஜிது ஜனசா தொழுகைக்காகவும் ஈது தொழுகைக்காகவும் கட்டப்பட்டிருக்கின்றதோ அதற்கும் அணிவகுப்புக்கள் சேர்ந்திருக்க வேண்டியது ஷரத்து என்பதைத் தவிர, இதர விஷயங்களில் மஸ்ஜிதின் விதியில் சேரமாட்டா.

மஸ் அலா:—வட்டாரத்தில் இரண்டு மஸ்ஜிதுகள் இருந்தால் அவைகளில் எது புராதன மானதோ அதில் தொழுவது மேன்மை. பழமையில் இரண்டும் சமமாக இருந்தால் எது வீட்டுக்குச் சமீபமாக இருக்குமோ அதில்

தொழுவது மேன்மை. சமீபத்திலும் இரண்டும் சமமாக இருந்தால் எதில் இஷ்டமோ அதில் தொழுகலாம். பின்பு ஒன்றில் கூட்டம் அதிகமாகவும் மற்றொன்றில் குறைவாகவும் இருந்தால் ஆலிமாயிருக்கக்கூடியவர், எதில் கூட்டம் குறைவாயிருக்குமோ அதில் தொழுவார். அவரின் காரணமாக அங்கு கூட்டம் அதிகரிக்கலாம். இன்றேல், இஷ்டப்பட்டதில் தொழுகலாம். ஆனால், இரண்டில் எதனுடைய இமாம் சட்ட திட்டங்களை அறிவம் அறிந்தவராக இருப்பாரோ அம்மஸ்ஜிதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதே உசிதம்.

மஸ் அலா:— எவருக்கு தனது வட்டாரமஸ்ஜிதில் ஜமாஅத் கிடைக்கவில்லையோ, அவர் வேறொரு மஸ்ஜிதில் சென்று ஜமாஅத்தோடு தொழுகவேண்டும். அல்லது தன் வீட்டுக்குத் திரும்பிவந்து அங்கே தனது குடும்பத்துடன் ஜமாஅத்தாக தொழவேண்டும்.

மஸ் அலா:— தனது வட்டார மஸ்ஜிதில் முதல் தக்பீர் அல்லது ஒன்றிரண்டு "ரக் அத்" கள் தவறிவிடும் என எண்ணினாலும் தனது வட்டார மஸ்ஜிதில் தொழுவதே சிறந்தது. வேறு மஸ்ஜிதில் பூர்த்தியாக ஜமாஅத் கிடைக்குமென்றாலும் அங்கே செல்லக்கூடாது.

மஸ் அலா:- தன் வீட்டில் தொழுகையை ஆரம்பித்த பின் வட்டார மஸ்ஜிதிலிருந்தோ அல்லது வேறு மஸ்ஜிதிலிருந்தோ 'இகாமத்' சொல்லும் சப்தம் கேட்டால் தொழுகையை முறித்துவிடக்கூடாது. பூர்த்தியாக்க வேண்டும்.

மஸ் அலா:- பாங்கு சொன்னபின் தொழுகாமல் மஸ்ஜிதைவிட்டு வெளியேறுவது ஆகாது, அது வட்டார மஸ்ஜிதாக இருந்தால். வேறு மஸ்ஜிதாக இருந்தால் அங்கிருந்து கிளம்பிவந்து தனது வட்டார மஸ்ஜிதில் தொழுகையை நிறைவேற்றுவது ஆகும், அங்கே, 'ஜமாஅத்' கிடைக்குமென்ற நம்பிக்கை இருந்தால். ஆயினும் அங்கிருந்து வெளியேருகிருப்பதே நலம்.

மஸ் அலா:- மஸ்ஜிதில் மின்சார விசிறி அமைப்பது ஆகும், ஆனல், இப்னுஹாஜ் மக்கீ (ரஹ்) 'மத்கல்' என்ற கிதாபில் இதனையும் ஒருவகையான 'பித்அத்' என்று கூறியுள்ளார்கள். ஏனெனில், முன்னோர்களாகிய புண்ணியவான்கள் காலத்தில் இப்பழக்கமிருந்ததில்லை. மௌலானு அப்துல்ஹை லக்னவீ (ரஹ்) அவர்கள் தமது பதாவாவில் கூறியுள்ளார்கள், "இது ஷரீஅத்பிரகாரம், பித் அத் என்று சொல்வது யோசிக்கவேண்டிய விஷயமாயிருந்தபோதிலும் இதனைவிட்டுவிடுவதே மேல் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறேதான் முன்னோர்கள் பின்பற்றியுள்ளார்கள்" என்று.

மஸ் அலா:- கற்பைப்பேணுத துர்கிரியையுடைய பெண் தனது ஹராமான வருமானத்திலிருந்து மஸ்ஜிது கட்டிவிட்டால் அது மஸ்ஜிதே ஆகாது. மேலும் அவளுக்கு அதனல் ஒன்றும் நன்மைகிடையாது. இதன் முழுவிபரம் அனுபந்தத்தில் பார்த்துக் கொள்க!

மஸ் அலா:- ஒருமஸ்ஜிதை நேர்த்தியாக்கும் நோக்குடன், அதுதானே இடிந்துவிழுந்துவிடும் என்ற அச்சம்

9733
N49

தோன்றும்வரையில் அதனை இடித்துவிடலாகாது. இடிந்து விழுந்து விடும் என்று தோன்றினால் அந்த வட்டாரத்திலுள்ளவர்கள் அதனை இடித்து விடலாம்.

மஸ் அலா. ஒரு மஸ்ஜிது இடிந்து நொறுங்கி, அதில் தொழுகைநடத்ததகுதியற்றதாக ஆகிவிட்டாலும் அல்லது அங்கிருந்த குடும்பங்கள் அழிந்து போய்விட்டாலும் அதனால் அங்கு மஸ்ஜிது இருக்கவேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும் அப்போதும் அது 'கியாமத்' நாள் வரையில் மஸ்ஜிதாகவே இருக்கும். எவருடைய சொத்துமாகாது. இவ்வாறே 'பத்வா' நடந்திருக்கிறது.

மஸ் அலா:- ஒரு மஸ்ஜிதின் கீழ் பாகத்தில் கடைகளோ அல்லது அறைகளோ அமைக்கப்பட்டு அவைகளுக்குமேலே மஸ்ஜிதோ அல்லது மஸ்ஜிதின் முற்றமோ இருக்குமானால், கீழேஉள்ள கடைகள், அறைகள் மஸ்ஜிதுக்காக 'வக்பு' செய்யப்பட்டுமேலும் அந்தவருமானம் மஸ்ஜிதின் நலன்களுக்காக உபயோகிக்கப்படுமானால் அவ்வாறு கட்டுவது ஆகும். இவ்வாறே கீழ்பாகத்தில் மஸ்ஜிதும் அதன்மேல்பாகத்தில் மஸ்ஜிதின் நலனுக்காக ஒரு கட்டிடம் கட்டப்படுமானால் அதுவும் ஆகும். இவ்விரண்டு நிலைமையிலும் அம்மஸ்ஜிதின் மஸ்ஜிதுத்தன்மைக்கு எத்தகைய இடையூறும் ஏற்படுவதில்லை. 'பதாவா' ஷாமீ என்ற நூலில் எழுதப்பட்டிருப்பதாவது:- மஸ்ஜிதின் கிழ்பாகத்திலுள்ள அறைகளும் அல்லது மஸ்ஜிதின் மேற்பாகத்திலுள்ள அறைகளுக்கும் மஸ்ஜிதுச்சாமான்கள் வைப்பதற்காக இருக்குமானால், அல்லது அவைகளின் வருமானம் மஸ்ஜிதுக்கேசேருமாறு வக்புசெய்யப்படுமானால் இது மஸ்ஜிதேயாகும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE
110914

மஸ் அலா:- இந்நிலைமையில் கீழே உள்ள கடைகளும் மேலே உள்ள கட்டிடங்களும் மஸ்ஜித் என்ற தன்மையில் சேரமாட்டா. இவ்வடிப்படையிலேயே இவைகளை வாடகைக்கு விடுவதும், இவைகளில் வியாபாரம் செய்வதும் ஆகும். குளிக்கக்கடமைப்பட்டவர்களும், ஹைழு, நிபாசுடைய பெண்களும் இவைகளில் பிரவேசிப்பதும் ஆகும்.

எச்சரிக்கை:- ஆனால் மஸ்ஜிதுகட்டும் போதே முதன் முதலிலேயே கட்டியவர் மேலே உள்ள கட்டிடங்களையும் அல்லது கீழே உள்ள அறைகளையும் கடைகளையும் மஸ்ஜிதை விட்டுப்பிரித்து வாடகைக்கு விடுவதையும் அதனை மஸ்ஜிதுக்கு 'வக்பு' செய்வதையும் (நிய்யத்) நிர்ணயம் செய்திருந்தால்தான் மேலே கூறிய யாவும் ஆகும். அவ்வாறின்றி, முதலில் மஸ்ஜிதைக்கட்டி பின்பு அதன்கீழ் அல்லது மேல் கடைகளை, கட்டிடங்களைக்கட்டி வாடகைக்கு விடுவது கூடாது. ஏனென்றால், மஸ்ஜிதானது, மேலே வானம் வரையிலும் கீழே பூமியின் இறுதி எல்லை வரையிலும் அனைத்தும் கியாமத் நாள் மட்டும் மஸ்ஜிதாகவே இருக்கும். அதில் ஏதாவது ஒரு பாகத்தை மஸ்ஜிதை விட்டுப் பிரிக்க முடியாது. இதற்காகவே, இந்நூலின் ஆரம்பத்திலேயே "மஸ்ஜிதின் மேல் தளம் எல்லாவிதிகளிலும் மஸ்ஜிதுக்குச் சமமான கண்ணியம் வாய்ந்தது, அதன் மீது மலஜலம் கழிப்பதும் சேர்க்கை செய்வதும் மாதவிடாயான பெண்கள் அதில் பிரவேசிப்பதும் ஆகாது" என்று எழுதப்பட்டிருக்கிறது.

மஸ் அலா:- மஸ்ஜிதின் ஒரு பாகத்தை மஸ்ஜிதை விட்டுத் துண்டித்து அதனை மற்றொரு உபயோகத்திற்காக

மாற்றுவது முற்றிலும் தகாது. அதுமஸ்ஜிதின் நலனுக்காக இருந்தபோதிலும்சரியே. உதாரணமாக, மஸ்ஜிதின் தளத் தில்ஹௌளு, அல்லது ஏணிப்படி கட்டுவது போன்று. ஆனால்மஸ்ஜிதுகட்டும் ஆரம்பத்திலேயே ஹௌளு முதலிய வைக்க இடம் குறிக்கப்பட்டு ஒதுக்கப்படுமானால் ஆகும். பொதுவாக இவ்வாறே வழக்கம் இருந்து வரு கிறது.

மஸ் அலா:- கூட்டான நிலத்தில் பாகஸ்தர்களின் அனுமதியின்றி மஸ்ஜிதுகட்டுவது கூடாது. அப்படியே கட்டினாலும் அதில் தொழுபவருக்கு மஸ்ஜிதில் தொழுதும் நன்மை கிடையாது. எனினும் இத்தகைய மஸ்ஜிதில் தொழாதிருப்பதே அவசியம்.

('பதாவா' அப்துல் ஹை ரஹ்)

மஸ் அலா:- தமது வீட்டின் வாயிலை மஸ்ஜிதுச் சுவற்றின் பக்கம் திறந்து கொள்ள எவருக்கும் உரிமை கிடையாது; அவர் மஸ்ஜிதில் மதபோதனை செய்பவரா யிருந்தாலும் சரியே. ஆனால், மஸ்ஜிதின் ஒருகட்டிடத்தை இமாமுக்காகவே கட்டப்படுமானால் அப்போது அதில் மஸ்ஜிதின் பக்கம் வாயில் அமைத்துக்கொள்வது ஆகும்.

மஸ் அலா:- ஒரு மஸ்ஜிது இடிந்து தகர்ந்து விடுமா னால், அந்த மக்கள் குடிகளும் ஒழிந்து, மீண்டும் அங்கு குடியேறுவார்கள் என்ற நம்பிக்கையுமில்லாவிட்டால் அது முற்றிலும் அழிந்து பாழ்பட்டுப் போகுமானால், இங்ஙிலை மையில் காஜீகான், முல்லாகுஸ்ரூ, போன்ற சில மார்க்க நிபுணர்கள், அதன்சாமான்களை அகற்றிவேறொருமஸ்ஜிதில்

இணைத்து விடலாமென்றும் மேலும், அவ்விடத்தை பத்திரமாகவும் கண்ணியமாகவும் வைக்கவேண்டும், ஏனென்றால், அதுகியாமத் நாள்வரையில் மஸ்ஜிதே என்றும் அனுமதியளித்துள்ளார்கள். ஆனால், பெரும்பாலான மார்க்க நிபுணர்களிடம் அப்போதுகூட அதனை அகற்றுவது கூடாது. எனினும், அதேமஸ்ஜிதை புனருத்தாரணம் செய்ய முயற்சிப்பது முஸ்லிம்களின் முக்கிய கடமை. ஏனென்றால், அத்திசையில் செல்லக்கூடிய முஸ்லிம்கள் அதில் தொழுதுகொள்வார்கள் என்றும் கூறியுள்ளார்கள். "பஹ்ருர்ராயிக், சஆததுஸ்ஸாஜிது, போன்ற பிரபல கிரந்தங்களில் பெரும்பாலோரின் பத்வாக்கள் இவ்வாறே காணப்படுகின்றன.

## மஸ்ஜிதெலிராரின் விபரமும் அதன் விதியும்

மஸ்ஜிதெலிரார் என்பது மதீனாவில் முனாபிகீன் (நயவஞ்சகக்கார) களால் கட்டப்பட்டதாகும். அதன் மூலம் அவர்களது நோக்கம், மஸ்ஜிதெ குபாவின் ஜமாஅத்தில் பிரிவினையுண்டாக்க வேண்டுமென்பதும் இப்பிரிவினையின் காரணமாக முஸ்லிம்களிடையே ஐக்கியத்தைக் குலைக்க வேண்டுமென்பதுமேயாம். இதுவும்தவிர, முனாபிகீன்கள் அதிலேகூடி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீது குற்றம் குறைகூறுகிறவர்களாயும் சதியாலோசனைபேசுகிறவர்களாயும் இருந்தார்கள்: "தாங்கள் அதிலே ஒருபோதும் நிற்க (தொழுக) வேண்டாம்" என குர்ஆன் ஷரீபு அம்மஸ்ஜிதைப்பற்றிக் கூறிவிட்டது.

ஆகையால், முஸ்லிம்கள் ஒரு மஸ்ஜிதைக்கட்டும் போது கீழ்காணும் விஷயங்களைக் கவனத்தில்வைப்பது அவர்களது கடமையாகும். அதாவது:- அதன் நோக்கம் மற்றொரு மஸ்ஜிதின் ஜமாஅத்தைக் குறைப்பதாகவோ அல்லது முஸ்லிம்களுக்கிடையே பிளவையுண்டுபண்ணுவதாகவோ, பெருமை போட்டிக்காகவோ இருக்கக்கூடாது இன்றேல், நன்மையை நாசமாக்கக்கூடிய தின்மையாகவே வந்துமுடியும். மேலும் இது மஸ்ஜிதெலிராருக்கு ஒப்பாகும். இதன் விபரத்தை அநுபந்தத்தில் காணலாம்.

தப்ஸீர் கஷ்ஷாபில் வரையப்பட்டிருக்கிறது "அல்லாஹுதஆலா ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்களின் கையில் அதிகாரத்தைக்கொடுத்தபோது, அன்னவர்கள், "தங்கள் வட்டாரங்களில் மஸ்ஜிதுகளைக்கட்டுமாறும், ஆனால், ஒன்றுக்கொன்று இடைஞ்சல் ஆகக் கூடிய அதாவது, ஒன்றின் நோக்கம் மற்றொன்றின் ஜமாஅத்தைக் கெடுப்பதாகவோ அல்லது குறைப்பதாகவோ இருக்கும் இரண்டு மஸ்ஜிதுகளைக் கட்டவேண்டாமென்றும் முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டார்கள்.''

மஸ் அலா:- ஒரு மஸ்ஜிதின் தொழுகையாளிகளிடையே ஏதோ ஒருகாரணத்தால் விரோதம் ஏற்பட்டு இன்னும் குழப்பத்தைத் தவிர்த்துக்கொள்ளும் நோக்கத்தோடு ஒரு பிரிவார் வேறொரு மஸ்ஜிதைக்கட்டிக்கொண்டால் இது மஸ்ஜிதெலிராருக்கு ஒப்பாகாது.

மஸ் அலா:- ஒரு மஸ்ஜிதில் மத்ஹபைப்பின்பற்றியவர் (முகல்லித்) களுக்கும், மத்ஹபைப்பின்பற்றாதவர்

(கைருமுகல்லிச்) களுக்கும் இடையே சச்சரவு நேர்ந்து ஒரு பிரிவார் வேறொரு மஸ்ஜிதைக்கட்டிக்கொண்டால் இதுவும் மஸ்ஜிதெலிராருக்கு ஒப்பாகாது.

மஸ்அலா:- வட்டாரத்தில் மஸ்ஜிது இருக்கின்றது, ஆனால், வேலை, ஜோலிகளில் ஈடுபட்டிருக்கும் காரணத்தால் சிலர் அங்கு நடக்கும் ஜாமஅத்தில் கலந்துகொள்ள முடிவதில்லை. அவ்விதமானவர்கள் தங்களுடைய வீட்டுக்கு சமீபத்தில் ஒரு மஸ்ஜிதைக் கட்டிக் கொள்வார்களாயின் இதுவும் மஸ்ஜிதெலிராரின் விதியில் சேராது ஆனால். அவர்களின் நோக்கம், பண்டைய மஸ்ஜிதின் ஜமாஅத்தில் பிளவுபடுத்துவதாக இருக்கக்கூடாது. ஆயினும் பூர்வீக மஸ்ஜிதில் தொழுவதே சிறந்தது.

## ஈது காஹ்

இமாமைப்பின் தொடர்ந்து தொழுகும் விஷயத்தில் ஈதுகாஹ்வின் விதி மஸ்துக்குச் சமமானதே. அதாவது:- மஸ்ஜிதில் அணிவகுப்புக்கள் சேர்ந்ததாக இல்லாவிட்டாலும் இமாமைத்தொடர்வது ஆகுமாற்போல் ஈதுகாஹ்விலும் அணிவகுப்புக்கள் சேர்ந்தில்லாவிட்டாலும் இமாமைப்பின் தொடர்வதுஆகும். இதுவன்றி அனேகசட்டதிட்டங்களில் ஈது காஹ் உடையவிதி மஸ்ஜிதுக்குப் புறம்பானதாகும். உதாரணமாக, குளிக்கக் கடமையானவர்களும் ஹைளு, நிபாசுடையபெண்களும் அதில் பிரவேசிக்கலாம். இவையனைத்தும் இந்நூலின் மற்றோரிடத்தில் வந்திருக்கிறது. விபரம் அனுபந்தத்தில் காண்க!

## முக்கியமான விஷயங்கள்

ஹகீமுல்உம்மத், முஹ்யிஸ்ஸுன்னத், ஹஜ்ரத்ஷாஹ் மௌலானா அஷ்ரப் அலீ (ரஹ்) அவர்களின் 'இம்தாதுல் பதாவா' என்ற நூலிலிருந்து பொறுக்கப்பட்டவை.

மஸ் அலா:- மன இச்சையினலின்றியும், சப்தங்களின் மோதலால் ஜனங்களுக்குச் சிரமம் ஏற்படாவிட்டாலும் ஒரே மஸ்ஜிதில் இரண்டு இடங்களில் தராவீஹ் தொழுகை நடைபெறுவது ஆகும். ஆனல், எல்லோரும் ஒரு இமாமுடன் தொழுவதே சாலவும் நன்று. புகாரீயின் ஹதீதில் அப்துர்ரஹ்மான் இப்னுல் காரீயின் அறிவிப்பின் மூலம் காணப்படுவதாவது:- ஹஜ்ரத்உமர் (ரலி) அவர்கள் ரமலானில் ஒருநாள மஸ்ஜிதுக்கு வந்தபோது ஒருவர் தனியே தராவீஹ் தொழுது கொண்டிருப்பதையும் மற்ளுெருவர் இரண்டு நான்கு பேர்களோடு தொழுதுகொண்டிருப்பதையும்கண்டார்கள். ஹஜ்ரத்உமர் (ரலி) அவர்கள், அவ்வாறு பிரிந்து தொழுதுகொண்டிருந்தவர்கள் மீது கோபம் கொண்டு எவ்விதத்திலும் கடிந்துரைக்கவில்லை. ஆனல், 'ஒரு இமாமுடன் சேர்ந்து தொழுவதே சிறந்தது, என்று சொன்னர்கள்.

மஸ் அலா:- பருவ மடையாத சிறுவனுடைய நிலத்தில் அவன் அனுமதியளித்த போதிலும் மஸ்ஜிது கட்டுவது கூடாது.

மஸ் அலா:- அரசாங்கம் ஒரு நிலத்தை மஸ்ஜிதுக்காகக் கொடுத்துவிட்டுப்பின்பு அதனைத் திரும்ப எடுத்துக் கொள்ளாது என்னும் பட்சத்தில் அந்த 'வக்பு' ஆகும்.

அந்நிலத்தில் கட்டப்படும் மஸ்ஜிது, மஸ்ஜிதின் விதியில் சேரும். ஏனென்றால், மஸ்ஜிதுக்காக வக்பு செய்யப் பட்டது விதியில் 'வஸிய்யத்து' செய்யப்பட்டதையே ஒக்கும். முஸ்லிமல்லாதவர் ஒரு மஸ்ஜிதுக்காக வஸிய் யத்துச் செய்வாராகின், அவர் அதை நன்மை என்று நாடினால் இந்த வஸிய்யத்து ஆகும். இன்றேல் ஆகாது. தற்கால அரசாங்கம் மஸ்ஜிதுக்காக நிலம் அளிப்பதை புண்ணியம் என்று கருதமானால் வக்பு சரி என்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை. அதற்கு புண்ணியம் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் வக்பு சரியாவதற்கு வழி வருமாறு:-

அரசாங்கம் அளிக்கும் இந்நிலமானது உண்மையில் பிரஜைகளுக்குரியது. நகரசபை அங்கத்தினர்களின் ஆலோசனை, அனுமதியின் பேரில் அளிக்கின்றது. நகரசபை அங்கத்தினர்கள் மக்களின் பிரதிநிதிகள். மக்களில் ஹிந்துக்களுமிருக்கின்றார்கள் முஸ்லிம்களுமிருக்கின்றார் கள். மேலும் பெரும்பாலான ஹிந்துக்கள் இத்தகைய அளிப்பைப் புண்ணியமானது என நம்பிக்கைகொண்டிருக் கின்றார்கள். இதனால் இந்த வக்பு 'ஜாயிஸ்' ஆகும்.

மஸ் அலா:- காபிரானவர் மஸ்ஜிதுக்குச் சந்தா கொடுத்தால் அதன் விபரமாவது:- அவன் அதனை நன்மை என்று கருதுவானாகில் அதை வாங்கிக்கொள்வது ஆகும். இன்றேல் ஆகாது. 'ஹிதாயா' என்ற கிதாபில் இதன் விபரம் வந்திருக்கிறது. ஆனால், கொடுப்பவருடைய அபிப்பிராயம் அங்கீகரிக்கப்படுமா? அல்லது அவரது மார்க்க விதிகளைக் கவனிக்கவேண்டுமா? என்பதில்தான்

பிரச்சினை இருக்கிறது. முந்தியதுதான் பொதுவாக பிரஸ்தாபமாயிருக்கிறது. ஆனால் என்னிடத்தில் (அஷ்ரப் அலிமௌலானா (ரஹ்) இரண்டாவதைக்கவனிக்க வேண்டு மென்பதுதான் ஏற்றதாக இருக்கின்றது. இது, விஷயத்தை மட்டும் கவனிப்பதாகும். சூழ்நிலைகளைக் கவனித்தால் காபிர்களிடம் சந்தா முதலியவைபெறுவதே உசிதமல்ல. ஏனெனில், இதனால், முஸ்லிம்கள்மீது அவர்களது உபகாரம் என்ற சுமை விழுகின்றது. "இஸ்லாம் உயர்வடையுமேதவிர தாழ்வுறாது.

மஸ் அலா:- ஒருசொந்தமான வீட்டின் பலகணியை மஸ்ஜிதின் பக்கம் திறந்துவைத்து போக்குவாத்துக்காக உபயோகிக்கப்படுமானால் ஆகாது. காற்றுக்காக என்று மட்டும் திறந்துவைத்தால் மேலும், எந்த சுவற்றின் பலகணி திறக்கப்படுமோ அந்தச்சுவர் அவனுக்குச் சொந்தமாயிருந்தால், அதனால் ஏதாவது கெட்டநோக்கமும் இல்லாதிருந்தால், அதன மூலம் மஸ்ஜிதுக்கும் மஸ்ஜிதிலுள்ளவர்களுக்கும் எத்தகைய கஷ்டமும் நேராதிருந்தால் அவ்வாறு திறந்துவைத்துக்கொள்வது ஆகும். ஏதாவது நஷ்டமோ அல்லது அலட்சியமோ நேர்ந்தால்கூடாது. உதாரணமாக, அங்கிருந்து மஸ்ஜிதுக்குள் புகை செல்கிறது அல்லது குப்பை கூளம் கொட்டப்படுகின்றது என்றால் ஜன்னல் வைப்பது விலக்கப்பட்டதாகும்

மஸ் அலா:- மஸ்ஜிதுகளில் ஓசையுள்ள மணிகள் வைப்பது ஆகும். அவ்வாறே, மார்க்கநிபுணர் (புகஹா)கள் சஹருக்கு தப்புக்கொட்டுவதை அனுமதித்துள்ளார்கள்.

## அனுபந்தம்.

'ஆதாபுல் மஸாஜித்' என்ற இந்நூலை மௌலவீ மூஹம்மது ஷபீஉ சாஹிப் அவர்கள் இயற்றி இரண்டா வது தடவையாக பதிப்பிக்கப்போகும்காலை அதில் சில இடங்களில் குறியிட்டு அவைகளுக்கு என் அபிப்பிராயத்தை எழுதுமாறு கேட்டு என்பார்வைக்கு அனுப்பிவைத்தார். அவ்விடங்களில் நான் எழுதிய விளக்கங்களை, 'தாபுஸ் ஸாஜித்' எனப் பெயரிட்டு அத்துடன் அனுபந்தமாகச் சேர்த்து வெளியிடலானார். அவர் எழுதிய இடங்களில் 'அவர்' என்றும் நான் எழுதிய இடங்களில் 'நான்' என் றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. மேலும், மற்றோரிடத்தி லிருந்து எனக்குவந்த இரண்டுகேள்விகளையும் அவைகளுக் குரியபதிலை(பத்வாவை)யும் இத்துடன்சேர்த்திருக்கிறேன்.

மௌலானா, ஷாஹ் (அஷ்ரப்அலீ) (ரஹ்)

## மஸ்ஜிதில் செய்யத்தகாத, மக்ரூஹ் ஆன காரியங்கள்.

அவர்:- ஒரு தொல்லையின் காரணமாக மஸ்ஜிதில் உட்காருவது மக்ரூஹ்.

நான்:- இவ்விஷயத்தில் மார்க்க நிபுணர் (புகஹா) களின் கூற்றுப்படி நான் அறிந்திருப்பதாவது:- வணக்கத் திற்காக மஸ்ஜிதில் அமருவது பொதுவாக அனுமதிக்கப் பட்டதும் பாவத்திற்காக மஜிஸ்தில் அமருவது பொது வாக விலக்கப்பட்டதுமாகும்.

அந்த வணக்கத்தையோ, அல்லது அந்த பாவத்தையோ எண்ணிக்கொண்டே மஸ்ஜிதுக்குப் போயிருந்தாலும் சரி. அல்லது முன்பாகவே மஸ்ஜிதுக்குப் போயிருக்கும் போது எதிர்பாராத வகையில் அவைகள் வந்துசம்பவித்துவிட்டபோதிலும்சரியே. வணக்கமும்பாவமும் இல்லாத சாதாரண விஷயத்திற்காக குறிப்பாக மஸ்ஜிதுக்குச் செல்வது மக்ரூஹ். ஆனால், அந்தக்காரியத்தை எண்ணிக்கொண்டு மஸ்ஜிதுக்குச் செல்லவில்லை. ஆயினும் ஏதோ ஒரு வணக்கத்திற்காகச் சென்றிருந்த போது அங்கே அந்த ஆகுமான காரியத்திலும் எதிர்பாராது ஈடுபட்டுவிட்டால் அந்நிலைமையில் அதில் மிகைப்படுத்தாத நிபந்தனையின் பிரகாரம் ஆகும். உதாரணம் வருமாறு:-

ஒரு மனிதன், துக்கம் விசாரிப்பவர்கள் மஸ்ஜிதில் வந்து தன்னைமையித்திற்காக துக்கம் விசாரித்துவிட்டுச் செல்லட்டும் என்ற நோக்கத்தோடு மஸ்ஜிதுக்குச்சென்று உட்கார்ந்துகொள்வது மக்ரூஹ். வேறுசிலரிவாயத்துகளில் இத்தகைய சந்தர்ப்பங்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே மஸ்ஜிதில் சென்று அமர்ந்திருந்தார்கள் என்று கூறப்பட்டிருப்பதன் கருத்தும் காரணமும் வேறாக இருப்பதால் இதற்கு ஆதாரமாகாது. ஏனென்றால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜனங்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிப்பதற்காகவும் வழக்கு-தகராறுகளைப் பைசல் செய்வதற்காகவும் மஸ்ஜிதில் அமர்ந்திருப்பது வழக்கமாக இருந்துவந்தது. அன்றைய தினமும் அதேநோக்கத்தில் அங்கு அமர்ந்திருந்தார்கள். அதுவே அமர்ந்திருக்கும் இடமாகவும் இருந்தது. துக்கம் விசாரிப்பவர்கள் அன்று அவ்விடம் கூடினார்கள். இதுவன்றி, இதற்கென்றே

அன்றுமட்டும் வழக்கத்திற்கு மாற்றமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு அமரவில்லை.

அவர்:- மஸ்ஜிதில் விவாக ஒப்பந்தம் நடத்திவைப்பது முஸ்தஹப்பு.

வினு:- தற்காலத்தில் கூச்சல் கொண்டாட்டம் நடந்துவரும் காரணத்தால் இது விலக்கப்படலாமா?

நான்:- "ஒருதடவைமஸ்ஜிதில் அபிசீனியர்கள்,ஈட்டி, வாள், அம்பு முதலிய யுத்தஆயுதங்களை வைத்துக்கொண்டு விளையாட்டுகள் நடத்தினர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்விளையாட்டுக்களை எனக்கும் காட்டினர்கள்" என்று ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு ஹதீதைரிவாயத் செய்திருக்கிறார்கள். அந்நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூச்சல் கொண்டாட்டத்தைவிட, விவாஹத்தின் போது அதிகமான கூச்சல் ஏற்படுவதற்கில்லை- அப்போதுநிகழ்ந்த அக்காரியம் அங்கு பொருட்படுத்தப்படவில்லையாயின், இங்கு எவ்வாறு பொருட்படுத்தமுடியும்? ஆனால், எந்த முஸ்தஹப்பான காரியத்தில் இத்தகையபாவமான செய்கைகள் ஏற்பட இடமுண்டோ அங்கே அந்தப்பாவமான காரியத்தைமட்டும் தடுத்துவிடுவது அத்யாவசியம். இதற்கு மாற்றமாக, ஆகுமான, அல்லது முஸ்தஹப்பான காரியத்தையே தடுத்துவிடுவது கூடாது. ஷரீஅத்தில் வேண்டப்படாததைத்தான் விலக்கவேண்டும். மஸ்ஜிதில் நிகாஹ் செய்வது முஸ்தஹப்பு என்பதற்கு ஆதாரங்களுண்டு.

(ஆனால், மஸ்ஜிதின் மாண்பைக் குலைக்கக்கூடிய ஷரீஅத்திற்கும் கௌரவத்திற்கும் இழுக்கான காரியங்கள் நடந்துவிடுமென்றோ பலவருப்பார்களும், சிறு பிள்ளைகளும், அசூசியானவர்களும் அங்கே கூடிவிடுவார்கள் என்றோ சந்தேகமில்லாவிட்டால் தான் முஸ்தஹப்பாகும். இன்றேல் ஏற்றத்திற்கு மாற்றம் என்பது மட்டுமின்றி குற்றமுமாகும். நன்குணர்க.)

அவர்:- ஜனாசா மஸ்ஜிதுக்கு வெளியில் வைக்கப்பட்டு ஜமாஅத் மஸ்ஜிதின்உள்ளே நின்று தொழுதால் இதுவும் மக்ரூஹ். ஆனால், அவசியத்திற்காகச் செய்யப்பட்டால் ஆகும்.

வினா:- இந்த பத்வா, இரண்டிலொரு சொற்படி அவசியமான சந்தர்ப்பத்தில் கவனிக்கத்தக்க தாயிருப்பதால், சரியா, சரியல்லவா? என்பதை எழுத்துமூலம் தெரியப் படுத்தவும்.

நான்:- சட்டப்படி அவசிய நிலைமையில் இந்த பத்வாவின் பிரகாரம் நடந்துகொள்வது சரி என்று தெரிகிறது. அவசியம் ஏற்படும்காலை மக்ரூஹ் அல்ல. (துர்ருல் முக்தார்)

அவர்:- மஸ்ஜிதில் சப்தமிட்டு திக்ரு செய்வதும் குர்ஆன் ஓதுவதும் கூடாது.

நான்:- இதிலே பல அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. அவைகளில் ஷாமீ (ரஹ்) என்பவர்கள் ஹமவீ

என்ற கிதாபில் இமாம் சஅதானீ அவர்களின் சொல்லை எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். அதுவே முடிவானது. அது வருமாறு:- தூங்குகிறவர்களுக்கும் தொழுகிறவர்களுக்கும் அவர்களின் சப்தம் இடைஞ்சல் செய்யாவிட்டால் மஸ்ஜிதில் கூட்டமாகச் சேர்ந்து 'திக்ரு' செய்வது முஸ்தஹப்பு என்று உலமாக்களில் முன்னோர்களும் பிற்காலத்தவர்களும் ஏகோபித்துக் கூறியுள்ளார்கள் இந்த தீர்ப்பில் எல்லாவிதமான அபிப்பிராயங்களும் இடம் பெறுகின்றன. எவர்கள் பொதுவாக விலக்கப்பட்டது என்றார்களோ அவர்களின் நோக்கம் அந்த திக்ரு செய்யும் முறையை நிறுத்திவிடவேண்டும் என்பதாக இருக்கலாம். இது மஸ்ஜிதின் முக்கியத்துவத்தைக் கவனிக்கும் வார்த்தையாகும். மற்றொன்று சப்தமிட்டு திக்ரு செய்வதையும் குர்ஆன் ஓதுவதையும் செவிமடுத்துக் கேட்கவேண்டும் என்பதைப் பொருத்ததாகும். சப்தம் மிகையாகாதிருக்குமானால்ஆகும் என்பதே திடமான முடிவு. குர்ஆன் ஓதுவது மார்க்கப் பிரச்சாரத்திற்காக நடக்குமானால் தொழுகைக்கு வெளியே அதனைக் கேட்பது வாஜிபு. மேலும் இவ்விஷயம் குர்ஆனுக்கு மட்டும் குறிப்பானதல்ல. பொதுவாக உபதேசத்திற்கும் இதே விதிதான்.

அவர்:- மஸ்ஜிதின் முகடு அல்லது சுவர்களில் வெளவால் அல்லது இதர பறவைகள் கூடுகட்டியிருக்குமானால் அதனைக்கலைத்துவிடுவது ஆகும்; ஆனால் மஸ்ஜிதைத்தவிர இதர இடங்களில் கலைக்கப்படக்கூடாது. ஏனென்றால் "பறவைகளை அவைகளின் கூடுகளில் வசிக்கவிடுங்கள்" என்று ஹதீதில் வந்திருக்கின்றது.

நான்:- இந்த ஹதீதிலிருந்து இவ்விஷயத்திற்கு ஆதாரம் தேடுவது சிரமம். இதில் வேறு சம்பவங்களுக்கும் இடமுண்டு. அஞ்ஞான காலத்தில் மக்கள் பறவைகளைப் பறக்கவிட்டு எப்பக்கம் செல்கின்றன என்பதைக் கொண்டு சாஸ்திரம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்பழக்கத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விலக்கிக் கொண்டிருந்தார்கள்: பொதுவாக, பறவை பிராணிகள் வசிப்பதால வீடு ஆபாசமாகிவிடுகிறதென்றால் கூடுகளைக் கலைத்துவிடுவது ஆகும். ஆனால்,முட்டைகளும் குஞ்சுகளும் உள்ளகாலத்தில் சிறிது பொருத்திருந்தால் அது இரக்கத்சித்தமாயிருக்கும்.

## மஸ்ஜிதின் சில குறிப்பான விதிகள்

அவர்:- விலைமாது தனது ஹராமான வருமானத்தைக் கொண்டு மஸ்ஜிது கட்டிவிடுவாளாகில் அது மஸ்ஜிதே ஆகாது. மேலும், அதனால் அவளுக்கொன்றும் புண்ணியம் கிட்டாது.

(மௌலானா அப்துல் ஷுகூர்)

நான்:-இதில்இருவிஷயங்கள் இருக்கின்றன. ஒன்றுபுண்ணியம் கிட்டாதென்பது. "அல்லாஹ் பரிசுத்தமானவன் பரிசுத்தமானதைத்தவிர வேறெதையும் ஏற்றுக்கொள்ளான்" என்ற ஹதீது இதற்குச்சரியான ஆதாரமாகஇருக்கின்றது. மற்றொன்று, அது மஸ்ஜிது ஆகாது என்பது. இதற்கும் ஆதாரம் தேவைப்படுகின்றது. மௌலானா அப்துல்ஷுகூர் (மர்ஹூம்) உடைய அபிப்பிராயம் மட்டும் ஆதாரமாகி விடாது. மஸ்ஜிதின் விதிகளில் அதுவும் மஸ்ஜிதாக இருப்

பது 'பிக்ஹு மஸ் அலா' வாக இருக்கிறது. ஆகையால் மஸ்ஜிது ஆவதற்கு ஹலாலான பொருளாக இருக்க வேண்டும் என்பது எந்த பிக்ஹு கிதாப் களிலும் கூறப் பட்டிலலே. எவ்வாறெனின், ஒருமனிதன் புகழாசைக்காக ஒரு மஸ்ஜிதைக்கட்டி வக்பு செய்தால் அந்த வக்புஏற்றுக் கொள்ளப்படாததாக இருந்தபோதிலும் பாவத்தின் அச்சமிருக்கிறது. ஆனால் வக்பு கூடிவிடும். இவ்வாறே அம் மஸ்ஜிது ஏற்றுக்கொள்ளப்படாததாக இருந்தபோதிலும் பாவம் ஏற்படும் என்ற அச்சமிருக்கிறது. ஆனால் விதி களில் மஸ்ஜிதாகிவிடும். அதனைகிரையம் செய்வது கூடாது. ஹைலுக்காரரும் குளிக்ககடமைப்பட்டவர்களும் அதனுள் பிரவேசிக்கக்கூடாது. மலஜலம் கழிப்பதும் கூடாது.

ஆனால், அதனை என்ன செய்யவேண்டும் என்பதே இப்போது கேள்வி. அதற்குரிய சட்டம் எங்காவது கூறப் பட்டிருப்பதாகவே தெரியவில்லை. சட்டங்களை ஆராய்வதி னின்று தெரிவது என்னவென்றால், 'அதனைப்பூட்டி வைத்துப் பாதுகாக்கவேண்டும். அதில் தொழுகக் கூடாது. அதிலே அவமரியாதையான காரியங்கள் நடக்கக் கூடாது.' ஒரு நிலம் ஹலாலான வகையில் கிடைத்து கட்டிடம் ஹராமான பொருளைக்கொண்டு கட்டப்பட்டி ருக்குமானால் அதனை அகற்றிவிட்டு பதிலுக்கு வேறு வரு மானத்தைக்கொண்டு கட்டிடம் கட்டிவிட்டால் பயன் படுத்துவது ஆகும். ஹராமான பொருளைக்கொண்டுகட்டப் பட்ட மஸ்ஜிதுக்கு உதாரணம், அசுத்தமான மையினால் எழுதப்பட்ட குர்ஆனுக்கு ஒப்பாகும். அதிலே ஓதுவதும் கூடாது. ஒழுங்கீனம் செய்வதும் கூடாது. எனினும் அதைப்பூமியில் அடக்கம் செய்து விடவேண்டும். இதா

விஷயங்கள் நுட்பமானவை. உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்க.

அவர்:- கீழ்கடைகள் அல்லது அறைகள் அமைத்து மஸ்ஜிது கட்டப்பட்டால்.........

நான்:- இவ்விஷயத்தில் நன்கு ஆராய்ந்து தேடியபின் நான் அறிந்த முக்கியமான பிக்ஹு சட்டங்களை இதோ கீழே தருகின்றேன்:-

இதற்கு உதாரணம், 'பைத்துல் முகத்தஸ்' உடைய மேன்மாடிகளாயிருக்கும். அவைகளை முன்னோர் (கைருல் குரூன்)களில் எவருமே மறுக்கவில்லை. இதனால் மஸ்ஜிதின் நலனுக்காக மஸ்ஜிதுக் கட்டிடத்தில் இரண்டாவது மெத்தை இருப்பது ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது.

இந்தச்சட்டம் தெளிவான ஆதாரத்தைக்கொண்டதல்ல, எனினும் மஸ்ஜிதைத் தொடர்ந்ததாக இருப்பதை கிதானிப்பதன் மூலம் ஏற்பட்டதாகும்.

மேற்கூறப்பட்ட மேன்மாடிகளால் ஏற்படக்கூடிய நலன்களும் அவைகளில் காணப்படும் தொடர்புமிருந்தால் இவ்வாறு பைத்துல் முகத்தஸ் உடன் இதனையும் ஒப்பிட்டு ஆகுமென்று கூறலாம். ஆனால் தனியாகப் பிரித்து வக்பு செய்வது போன்று நலன்களும் உபயோகமும் வேறுவிதமாயிருந்தால் அல்லது மஸ்ஜிதின்மீது மெத்தையோ, மெத்தையின்மீது மஸ்ஜிதோ இருப்பதுபோன்று தொடர்பின்தன்மை மாறி இருந்தால்

லைபத்துல் முகத்தஸ் உடன் ஒப்பிட்டுத் தீர்மானிப்பது மறைமுகமானதாயிருக்கும். வெகுநாள் வரையில் இதில் எனக்கு சந்தேகமிருந்துவந்தது' ஆயினும் ஷாமீ (ரஹ்) அவர்களிஸ் அஸ்ஆப் என்ற நூலில் கிதாபுல் வக்பு என்ற பாடத்தின் ஒரு வாசகம், "மெத்தையும் கட்டிடங்களும் மஸ்ஜிதின் உபயோகத்திற்காகவோ, அல்லது வக்பு ஆகவோ இருக்குமானல் மஸ்ஜிதாகும்" என்று எழுதி யிருக்கிறார். இதனால் மஸ்ஜிதுக்கென தனியாக இருப் பதற்கும் இதே விதிதான் என்பது தெளிவாகிறது. அதன் பெயர், மஸ்ஜிதின் உபயோகத்திற்குரியது என்று கூறப் பட்டாலும்சரி. அல்லது மஸ்ஜிதின் உபயோகத்திற் குரியதின் விதியில் சேர்ந்தது எனக் கூறப்பட்டாலும்சரி எவ்வாறாயினும் விதி பொதுவானதே.

இவ்வாறு இரண்டாவது மெத்தை கட்டுவதானது, மஸ்ஜித் கட்டியவர் கட்டும்நேரத்திலேயே இதனை மனதில் எண்ணிக் கட்டியிருந்தால்தான் ஆகும். அஃதின்றி மஸ்ஜிது கட்டிமுடித்தபின் இப்படி ஏதாவது கட்டுவது கூடாது.

வானத்தின் கடைசி எல்லைவரையிலும் பூமியின் இறுதி கீழ்வரையிலும் மஸ்ஜிதின் விதியாகும் என 'புகஹாக்கள்' கூறியிருப்பதானது கட்டும்போதே கீழ் பாகத்தை அல்லது மேல் பாகத்தை கட்டுவதாக நிய்யத் செய்திருக்காவிட்டால்தான் என்றறிக.

இவ்விஷயத்தில் பெரும்பாலான மக்கள், 'கல்வி மான்கள்கூட அலட்சியமாயிருப்பதுபற்றி எச்சரிக்கின்

றேன். இவ்வெல்லா விதிகளிலும் மஸ்ஜிதை ஒட்டிய பாகங்களும் மஸ்ஜிதைப்போன்றவையே ஆகும்.

## மஸ்ஜிதெலிராரும் அதன் விதியும்

• அவர்:- மஸ்ஜிதெலிரார் முனபிகீன்களால் கட்டப்பட்டது.

நான்:-மாஷா அல்லாஹ்! ஆசிரியரவர்கள் மஸ்ஜிதெலிராருக்கு ஒப்பாகும் விஷயத்தில் மிகவும் நுண்மையாக நடந்துகொண்டிருக்கிறார். இன்றேல் அநேக அவசர புத்திவாய்ந்தவர்கள், புகழாசை, பிறநோக்கம்கொண்டு கட்டப்பட்ட மஸ்ஜிதுகளை மஸ்ஜிதெலிரார் என்றே கூறியிருக்கின்றார்கள். அதனால் மஸ்ஜிதெலிரார் எவ்வாறு மஸ்ஜிது ஆகாதோ அதுபோன்றே இதுவும் மஸ்ஜிது ஆகாதோ என்ற சந்தேகம் உண்டாகிறது. மேலும் அதனை இடித்துவிடுவதும் அவமரியாதை செய்வதும் ஆகுமென்று தெரிகிறது. இவ்வாறேதான் மஸ்ஜிதெலிரார் நடத்தப்பட்டது. ஒப்பு என்ற வார்த்தையைக்கூறி எல்லா சந்தேகங்களையும் நிவர்த்திசெய்துவிட்டார். அதாவது, நன்மை கிடையாமல்போவது, பாவம் விளைவதுபோன்ற விஷயங்களில் அதற்கு ஒப்பாகாது. நோக்கத்தில் மஸ்ஜிதெலிராருக்கு ஒப்பாக இருக்கலாம். ஆனல் மஸ்ஜிது ஆகாமல்போகும் விஷயத்தில் ஒப்பாகாது. ஏனென்றால், முனபிகீன்களின் நோக்கமே மஸ்ஜிதுகட்ட வேண்டுமென்பதாக இருக்கவில்லை. சதிக்கும் சூழ்ச்சிக்கும் இருப்பிடத்திற்கே மஸ்ஜிது என்று பெயர் வைத்துக்கொண்டார்கள். ஆனல், முஸ்லிம்கள் எந்தநோக்கத்தைக்கொண்டு கட்டினு

னும், அவர்களின் எண்ணம் மஸ்ஜிது கட்டுவதாகவே இருக்கிறது, இதனால் தொழுகை நிறைவேறுவது மரியாதை செலுத்துவது கடமையாவது போன்ற விஷயங்களில் மஸ்ஜிதுக்கு ஒப்பாகவே இருக்கிறது. ஆகவே, இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இல்லாத விஷயத்தில் ஹராமான பொருளைக்கொண்டு கட்டப்பட்ட மஸ்ஜிதுக்குக் கூறப்பட்ட முறையே இதற்கும் ஆகும். ஆனால் சிறிது வித்தியாசமுண்டு. அதாவது, அதை திருத்துவதற்கு ஒருவழியும் கிடையாது. இதனைத்திருத்துவதற்கு பாபமன்னிப்பு (தவ்பா) தேடுவதன் மூலம் முடியும். தவ்பா செய்யப்பட்டபின் இக்கட்டிடம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகிவிடும்.

## ஈதுகாஹ்

அவர்:-பெரும்பாலான விஷயங்களில் ஈதுகாஹ்வின் சட்டம் மஸ்ஜிதுக்கு மாறுபட்டதாயிருக்கிறது. உதாரணமாக குளிக்கக்கடமைப்பட்டவர்களும் ஹைஹுநிபாசுடைய பெண்களும் அதில் பிரவேசிக்கலாம்.

நான்:- இதற்கு மாற்றமாக எந்த விதியும் தோன்றவில்லை, எனவே இதுசரியே. ஆனால், அதனையும் பரிசுத்தமாகவும் கண்ணியமாகவும் வைத்துக் கொள்ளவேண்டும்.

"தொழுகை யிடங்களைவிட்டு ஹைஹுக்காரப் பெண்களை ஒதுக்கிவையுங்கள்" என்ற ஹதீதிலிருந்து ஈதுகாஹ்வில் ஹைஹுக்காரப் பெண் பிரவேசிக்கலாம் என்பதற்கு முரண்பாடு தெரிகிறதே என்றால், அதற்கு ஜவா

பாவது:- தொழுகையிடத்தில் பிரவேசிப்பது ஹராம் என்றகாரணத்தால் ஒதுக்கிவைக்க வேண்டும்என்பதுகருத்தல்ல; எனினும், தொழுகிற பெண்களின் அணிவகுப்புக்களைக் குறுக்கிட்டுத் தாண்டிக்கக்கூடாது என்பதற்கேயாம். நன்கு அறிந்து கொள்க!

## மஸ்ஜிதுபற்றிய இரண்டு முக்கிய பத்வாக்கள்

வினா:- முஸ்லிம் அதிகாரி ஆங்கிலஉடை தரிக்கா விட்டால் ஜனங்கள் அவரை மதிப்பதில்லை என்ற காரணத்திற்காக ஆங்கிலஉடை தரித்துக்கொள்ளலாமா?

விடை:-உங்களைப் போன்ற விவேகிகளிட மிருந்தும் அறிவாற்றலுடைவர்களிடமிருந்தும் இத்தகைய வினாப் பிறப்பது ஆச்சரியமே; முதலாவது, இது வெறும் சந்தேகஎண்ணமாகவும் அனுபவத்திற்கும் உண்மைக்கும் முரண்பட்டதாகவும் இருக்கின்றது. என்னும் ஆங்கில உடையை கைவிடுவதால் கௌரவம் அதிகரிக்குமே தவிர குறையாது முதலாவது, இது மதப்பற்றுக்கு ஒரு விசேஷ சிறப்பாகும். குறிப்பாக பிரமுகர்களில் மதப்பற்று இருக்குமாயின் இதுபற்றி நாவுகள் புகழும், உள்ளங்கள் உவகை கொள்ளும். ஆரம்பத்தில் வெறுப்புடன் இருந்தமதிப்பு, பின்பு அன்புடன் கூடிய மதிப்பாகிவிடும்.

'எவரொருவர் அல்லாஹ்வுக்குப்பயப்படுவாரோ அவருக்கு எல்லாவஸ்துக்களும் பயப்படுகின்றன' என்று ஹதீதில் வந்திருப்பது இதற்கு ஆக்கமளிக்கின்றது.

இவையனைத்தும் தவிர, தாடி வைப்பதைவிட — அதனை எடுத்துவிடுவதானது அதிக கௌரவத்தையும் பயங்கரத்தையும் கொடுக்கின்றது. அல்லது இஸ்லாமிய ஆடை அணிவதைவிட காபிர்களின் ஆடையணிவது அதிக பயத்தைக் கொடுக்கின்றது அல்லது முஸ்லிமாயிருப்பதைவிட கிறிஸ்தவராக இருப்பது அதிகபயத்தைக் கொடுக்கின்றது என்று பாமரமக்கள் எண்ணுவார்களாயின் அதற்காக இந்த எல்லைவரை அடர்ந்தேறிச்செல்ல அனுமதியளிக்க முடியுமா?

13-ரமலான், ஹிஜ்ரீ 1346.

வினா:- இவ்விஷயத்தில் கண்ணியமிக்க மார்க்க அறிஞர்கள் என்னதீர்ப்புக் கூறுகின்றார்கள்? ஒரு கருவி (ஒலிபெருக்கி) பிரசங்கியின் சப்தத்தை அதிக தூரம் வரையில் பரவச் செய்கின்றது, அதனால் அங்குள்ளவர்களும் சமீபத்திலிருப்பவர்களைப் போன்று, கேட்டுக்கொள்ளமுடிகின்றது. எனவே இத்தகைய கருவியின் மூலம் 'கதீபு' உடைய சப்தத்தை கூடியிருப்பவர்கள் எல்லோருக்கும் பரவச்செய்யலாமா?

விடை:- முதலில் சட்டத்தை அறிந்துகொள்ள வேண்டும். சட்டம் அறிவுக்குப்பொருந்தியதுமுண்டு. ஆதாரபூர்வமானதுமுண்டு. ஹனபீ 'புகஹா'க்கள் இச்சட்டத்தின் மூலம் அனேக விதிகளைக்கண்டு பிடித்திருக்கின்றார்கள். அவைகளாவன:- ஒரு (முபாஹ்) ஆகுமான விஷயமோ அல்லது முஸ்தஹப்பான விஷயமோ, அவசியம் அல்லது குறிக்கோள் என்றளவில்லையை எட்டவில்லையானால், மேலும் அதனால் ஏதாவது கேடுவிளையும் என்ற சங்

தேகம் தோன்றினால் அங்கிலேயில் அந்த ஆகுமான காரியத்தையும் விட்டுவிடுவதும் விலக்குவதும் கடமையாகும். இது அறிவுக்குப் பொருந்தியது என்பது வெளிப்படை. புகஹாக்கள் அங்கீகரித்துக்கொண்டபின் இதற்கு ஆதாரத்தை எடுத்தெழுதவேண்டிய அவசியமில்லை. ஆயினும் அதனையும் எடுத்துக் காட்டுகின்றேன். ஆதாரபூர்வமானது என்பதற்கு கீழ்காணும் திருகுர்ஆனின் வசனம் சான்றாகும்.

"அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைக்கும் தெய்வங்களை நீங்கள் ஏசவேண்டாம். அறிவில்லாது விரோதமாக அவர்கள் அல்லாஹ்வை ஏசுவார்கள்", எல்லா வணக்யானவழிகளும் ஆகுமானவை என்பதும் சிலசந்தர்ப்பங்களில்முஸ்தஹப்பு என்பதுந்தெளிவு. ஆயினும், நோக்கத்தை நிறைவேற்ற இது ஒன்றே தனித்தன்மை வாய்ந்ததல்ல. ஏனென்றால் ஞானோபதேசம், அன்பான விவாதம், இன்சொல் போன்றவைகளாலும் இந்நோக்கம் நிறைவேறலாம். மேலும், இதிலே, இறைவனுக்கு இணைவைக்கக்கூடிய எல்லோருக்கும் பாதகமிருக்கின்றது, ஆகையால் இவ்வழி தடுக்கபபட்டுள்ளது. இப்பீடிகைக்குப்பின் பதில் தெளிவாக இருக்கின்றது.

அதாவது:- தூரத்திலிருந்து கேட்பவர்கள் வரைக்கும் பிரசங்கத்தை (குத்பா) ஒலிபரப்புவது மார்க்கச்சட்டப்படி அவசியமில்லை. மேலும் இதிலே கேடுவிளைய இடமுண்டு. ஜனங்கள் இதைச் சாக்குவைத்துக்கொண்டு இக்கருவியை வீணே உபயோகம் செய்வார்கள். அல்லது இதர வீண் விளையாட்டான அனாச்சாரமான கருவிகளை

யும் உபயோகிக்கத் துணிந்துவிடுவார்கள். ஆகையால் இதனைவிடுவதும்விலக்குவதும் அவசியம். 'கதீப்' என்பதன் கருத்து பொதுவாக உபதேசி அல்லது பிரசங்கி என்பதாக இருந்தால்தான் இதுவும் சரியாகும். ஈதிலோ ஜும்ஆவிலோ குத்பா ஓதுகிறவர் என்ற அர்த்தம்கொண்டால் அப்போது ஒலிபரப்புவது அவசியமில்லை என்பது தெளிவு ஏனென்றால், குத்பாவில் ஆஜராகவேண்டியதுதான் நோக்கமே தவிர சப்தத்தைக்கேட்கவேண்டுமென்பதல்ல. மஸ்ஜிதுக்குள் அக்கருவியைகொண்டுபோக நேருகிறது. அதனால் மஸ்ஜிதின் மாண்புக்கு முரண்பாடும் ஏற்படுகின்றது. மேலும் மார்க்கசார்பற்ற கூட்டத்திற்கும் ஒப்பாகின்றது. இவ்வாறு ஒப்பாகின்றது என்ற அடிப்படையிலேயே மஸ்ஜிதில் மரம் வளர்ப்பதையும் புகஹாக்கள் தடுத்திருக்கின்றார்கள். கோவில்களுக்கும், மாதாகோவில்களும் ஒப்பாகிவிடும் என்ற காரணத்தையும் காட்டியுள்ளார்கள்.

13—ரமலான், ஹிஜ்ரி 1346

## மஸ்ஜிதின் அருகே வீண் கூச்சல்

வினா:- இவ்விடத்திய சங்கத்தின் சில முக்கியமான தலைவர்களின் சார்பில் ஒரு மார்க்க வினா தங்களின் மேலான சமுகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. தங்களின் மேலான அபிப்பிராயத்தை தெரிவிப்பீர்களென நம்புகிறேன்.

சிலகாலமாக ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே மஸ்ஜிதின் முன்னால் கொட்டு, மேளம் கொட்டுவது சம்பந்தமாக எவ்வளவு இரத்தமும் கொலையும் நடை

பெற்று வந்துகொண்டிருக்கின்றன என்பது தங்களுக்கும் தெரியும். பம்பாயில் நடந்த திடுக்கிடும் இரத்த சம்பவத்தினால் இங்குள்ள சில தலைவர்கள் அதிக அதிர்ச்சியடைந்துள்ளார்கள். இவ்விஷயத்திற்காக சண்டைசெய்வதானது உயிருக்கும் பொருளுக்கும் வீண் சேதம் உண்டாக்கிக் கொள்வதாகுமா? அல்லது நன்மை தருமா? என்பதை நுண்ணியமிக்க உலமாக்கள் பொதுமக்களுக்கு உணர்த்த வேண்டுமென அவர்கள் கேட்டுக்கொள்கின்றார்கள்.

விடை:- ஆடல் பாடல் பொதுவாகவும், மஸ்ஜிதின் அருகே குறிப்பாகவும் வெறுக்கக்கூடியதும் தடுக்கக்கூடியதும் ஆகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பொதுவாக வெறுக்கப்படத்தக்கது என்பதற்கு பொதுவான ஆதாரங்களும், மஸ்ஜிதின் அருகே வெறுக்கப்படத்தக்கது என்பதற்கு கீழ்வரும் குர்ஆன் வசனமும் தக்க ஆதாரமாகும்.

"அவர் (காபிர்) களின் தொழுகையானது கஃபதுல்லாஹ்வினிடத்தில் சீட்டியடிப்பதும் கைதட்டுவதுமாகவே இருந்தது." அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுக நாடும்போது, அவர்கள் சீட்டியடித்தும் கைதட்டியும் இடையூறு செய்துகொண்டிருந்தார்கள். சீட்டியடிப்பதும் கைகொட்டுவதும், கொட்டு அடிப்பதையும் கூட்டமாய்க்கூடிப் பாடுவதையும்விட இலேசான சப்தமுள்ளது என்பதும், இத்தகைய இலேசான சப்தமே தடுக்கப்பட்டிருக்கும்போது கடினமான பலத்த சப்தம் எத்தனையோ மடங்கு அதிகமாக விலக்கப்படக்கூடியது என்பதும் மிகமிகத் தெளிவானது.

அதிலே வீண் விளையாட்டைத்தவிர், இஸ்லாமிய அபிலாஷைகளுக்கு முறண்படக்கூடிய தீய எண்ணமும் நோக்கமும் எதும் இல்லாதுபோயினும்கூட, மார்க்கத்தில் வந்த ஆதாரத்தை அமல் நடத்தவும் தொழுகையாளிகளுக்கு அவர்களது தொழுகையில் மஸ்ஜிதின் அருகே மனக்குழப்பத்தை உண்டாக்காமலிருக்கவுமே வெறுக்கப்பட்டிருக்கின்றது. வீண் விளையாட்டு என்ற காரணத்தால் பொதுவாகவும் தொழுகையின் அமைதியைக் கெடுக்கின்றது என்ற காரணத்தால் குறிப்பாகவும், முஸ்லிம்களேயும் இத்தகைய காரியங்களைச் செய்யவிடாது தடுக்கவேண்டும். அதில் இஸ்லாமிய இலட்சியங்களுக்கு விரோதமான, தவருன நோக்கம் இல்லாவிடினும் சரியே. இவ்வாறுதான் மக்காவின் விக்ரஹத் தொழும்பர்களின் எண்ணமுமிருந்துவந்தது. இஸ்லாத்தையும் முஸ்லிம்களேயும ஏளனம் செய்வதே அவர்களது நோக்கம். இக்காலத்திலும்கூட சில இடங்களில் காபிர்கள் இவ்வாறே எண்ணிக்கொண்டிருக்கிருர்கள் என்பது தகுந்த ஆதாரங்களோடு நன்கு தெரியவருகின்றது. ஆகையால் முஸ்லிம்களின் இச்செய்கையால், பழக்கம் மிகைப்பட்டுவிடக்கூடும்.

இஸ்லாமிய சட்டதிட்டங்களில் 'திம்மீ' (இஸ்லாமிய ஆட்சியின் கீழ் உள்ள காபிர்) களுக்கு மிகுந்த சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தும்கூட இத்தகைய விளைவை உண்டு பண்ணக்கூடிய விஷயங்களில் அவர்கள் தலையிடாது தடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த விளைவு அவர்களின் எண்ணத்தில் இல்லாவிட்டாலும் அவ் விளைவு எற்படாவிட்டாலும் தடைசெய்யவேண்டும். திம்மீயின் விதியில் கீழ் காணுவதும் உண்டு-

"அவசியத்திற்கின்றி அவர்களை வாகனத்தில் ஏறிச் செல்லவிடக்கூடாது. அவசியத்தையொட்டி சவாரிசெய் வார்களாயினும் முஸ்லிமகளின் ஜாமி உமஸ்ஜிதின் அரு கில் (மற்ருெரு குறிப்புப்படி) முஸ்லிம்களின் கூட்டங் களிலே கீழே இறங்கிக்கொள்ளவேண்டும்.''

இக்காரியம் 'குப்ரை' மதிப்பதாகவும் இஸ்லாத்தை இழிவாக எண்ணுவதாகவும் இருக்கும் பட்சத்தில் இதை விடக் கடினமானது (கொட்டுமேளம கொட்டுவது) என் தடை செய்யப்படமாட்டாது? ஆனுல், தன் சொந்த பலத்தாலோ அல்லது பிறரின் உதவியுடனோ தடைசெய்ய வன்மை இருந்தால்தான் தடைசெய்வது கடமை. இஸ்லாமிய ஆட்சிகாலத்தில் பிறர் உதவியின்றியே தடை செய்ய முடியும். இஸ்லாமிய ஆட்சி அல்லாத காலங் களில் அக்காலத்திய அரசாங்கத்தின் ஒத்தாசையின் மூலம் தடைசெய்யலாம்.

சக்தி (குத்ரத்) என்பது 'குத்ரதெஹிஸ்ஸியா' 'குத் ரதெஷர்இயா' என இருவகைப்படும். இங்கு ஷர்இயா தான் நோக்கம். அதாவது, ஷரீஅத் எதை சட்டதிட்டங் களில் அங்கீகாரம் செய்திருக்கின்றதோ அதுவேதான். எந்தசக்தியை உபயோகம் செய்தபின் அதைத்தொடர்ந்து ஏவப்படாததும் தாங்கமுடியாததுமான எத்தகைய தொந் தரவும் நிகழாதோ அந்த சக்திதான் ஷர்இய்யா என்று சொல்லப்படும்.

இதற்கு ஆதாரம் கீழ்வரும் ஹதீதாகும்:-

"உங்களில் ஒருவர் ஒரு நிராகரிக்கப்பட்ட காரியத்

ளைதக் கண்டால் அதனை அவரது காத்தால் தடுக்கவும்சக்தி யின்றேல் அவரது நாவால்தடுக்கவும் அதற்கும் சக்தியின் றேல் அவரது உள்ளத்தால் தடுக்கட்டும்.''

இங்கு சக்தி என்பது குதரத்தெஹ்ஸிஸ்ஸியாவாக இருந்திருந்தால், பெரும்பாலான நிலைமைகளில் காத் தாலும், எல்லா நிலைமைகளிலும் நாவாலும் சக்தியிருக் கவே செய்கிறது. அப்படியானல், பின்பு சக்தியின்றேல் எனக்கூறியிருப்பதற்கு என்ன அர்த்தம்! எனவே இதிலி ருந்து விளங்குவதுயாதெனின், சக்தியில்லாமை என்பதன் கருத்து, அந்த சக்தியைப் பிரயோகம் செய்வதால் ஏவப் படாததும் சமாளிக்கப்படாததுமான தொந்தரவு சம்ப வித்து விடக்கூடாது என்பதேயாகும்.

இதே சக்தி மேற்கூறப்பட்டவாறு இருவகைப் படும். ஒன்று பிறர் உதவிகொண்டுள்ளது. மற்றொன்று சுயபலத்தைக்கொண்டுள்ளது. இருவகையான சக்தியும் இல்லாவிட்டால் கடமை என்பது நிச்சயமாக நீங்கிவிடு கிறது. போர்புரிவது ஆகும் என்பதற்கு புகஹாக்கள் கீழ் காணும்ஷாத்துக்களைச்சேர்த்திருக்கிறார்கள், அதாவது:- போரினல் முஸ்லிம்களுக்கு பலமும் கௌரவமும் உண் டாகுமென்ற ஆரசவு இருக்கவேண்டும். போரினல் முஸ்லிம்களுக்கு பலமும் கௌரவமும் உண்டாகுமென்ற நம்பிக்கையில்லாவிட்டால் அதிலே தங்கள் ஆன்மாவிற்கு அழிவைத்தேடுவதால் போர்புரிவது 'ஹலால்' ஆகாது.

(ஆலம்கீரியா)

இம்மாதிரியே இன்னேரிடத்தில் இமாம் முஹம்மது (ரஹ்) அவர்கள் கூறுவதாவதாவது:-

"ஒரு மனிதன் தனியே போர்புரிந்து முஷ்ரிகீன்களை கொன்றோ, காயப்படுத்ியோ, அல்லது தோற்கடித்தோ அவர்கள்மீது வெற்றிகாணமுடியுமென திண்ணமாக நம்பினால் அவன் தனியே போர்புரிவது குற்றமில்லை. அவ்வாறு முஷ்ரிகீன்களமீது வெற்றிகாண முடியாது என்றும் தான் கொல்லப்படுவது நிச்சயம் என்றும் திண்ணமாக நம்பினால் அவன் போர்புரிவது கூடாது.

(ஆலம்கிரியா)

இக்காலத்தில் இத்தகைய அக்கிரமங்களை தங்கள் சுய பலத்தால் தடைசெய்ய இயலாதிருப்பதால் அரசாங்க ஒத்தாசைகிடைத்தால் அவ்வாறு செய்யவேண்டும். இன்றேல் பொறுமையைக்கடைப்பிடிக்க வேண்டும். எவர்களுக்கு இவ்விஷயம் தெரியாமல் எதிர்ப்பிலும் சண்டையிலும் ஈடுபட்டு மாண்டுவிடுவார்களோ, அவர்கள் நிரபராதிகளும் குற்றமற்றவர்களுமாவார்கள்.

இதுவும் அதுபோன்றதேயாகும்:- ஒரு மனிதனை அரசன் பிடித்துக்கொண்டு; 'நீ இந்தச் சாராயத்தைப் பருகாவிட்டால் அல்லது இந்த செத்த மாமிசத்தையோ, பன்றியின் மாமிசத்தையோ புசிக்காவிட்டால் உன்னை வெட்டிக்கொன்று விடுவேன் என்று பயமுறுத்தினால், அவைகளை அவன் புசிக்கலாம்; மேலும் அதனைப்புசிக்காவிட்டால் அவனை அரசன்கொன்றுவிடுவான் என்று திண்ணமாக எண்ணினால் அதைப் புசிப்பது அவன்மீது கடமையாகும். அவன் உட்கொள்ள மறுத்ததால் அரசன் அவனைக்கொன்றுவிட்டால் (எமது தோழர்களின் வெளிப்படையான அறிவிப்பின்படி) அவன் பாவியாகிவிடுகின்றான். ஷைகுல் இஸ்லாம் அவர்களின் கூற்றுப்படி, நிர்ப்

பந்தமான நேரத்தில் அத்தகைய ஆகாத பொருட்களையும் தின்பது ஆகும் என்ற விஷயத்தை அறியாத ஒரு மனிதன் புசிக்க மறுத்து அதனால் கொல்லப்படுவானாகில் அவன் பாவியாகமாட்டான். இவ்விஷயங்களை அறிந்தவனாக இருந்தால் பாவியாகிவிடுவான்.'' இவ்வாறே இமாம் முஹம்மத் (ரஹ்) அவர்களும் கூறியுள்ளார்கள்.

(ஆலம்கீரியா)

(மௌலானா) அஷ்ரப் அலி (ரஹ்)

24—ஷாபான், ஹிஜ்ரி 1355.

முற்றும்.

Q.7:3
N49

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110914

தமிழன் பிரஸ், ஈரோடு.

7·B
9-36


# எதிர்பாருங்கள்.

முஸ்லிம்கள் உன்னத வாழ்வையடைய, இஸ்லாமிய மூல பொக்கிஷங்களாகிய திரு குர்ஆன்-ஹதீது ஷரீப் இவையிரண்டும் விளக்கும் சன்மார்க்கத்தில் நடக்க வேண்டுமெல்லவா?

தற்காலத்திற்கேற்ற அவ்வழியில் நடாத்தி இக நற்புகழையும், பரலோக பாக்கியத்தையும் எய்திடச் செய்யும் மகத்தான,

## "ஹயாதுல் முஸ்லிமீன்"

என்னும் அழகிய நூல் வெகு விரைவில் வெளிவருகிறது.

எமது முன் வெளியீடுகள்:—

| | | |
|---|---|---|
| (1) | அறிவுச்சுரங்கம் | 1—0—0 |
| (2) | இக்பாலின் இதயம் | 0—6—0 |
| (3) | தென்னாடும் இஸ்லாமும் | 0–12—0 |

விபரங்கட்கு;—

மௌலவீ. A. சதக்கத்துல்லாஹ் (பாக்கவீ)

அதிபெ—பாஜில்,

c/o T. M. காதிர்பாஷா சாகிப்,

பெரியஅக்ரஹாரம் ஈரோடு.